38

# VIJAYA VILOCHENA.

## A TAMIL DRAMA

OFFICE OF THE REGISTRAR OF ... 1 JAN 191.. MADRAS

BY

*Sathavathanam*

*T. Krishnaswamy Pavalar.*

MADRAS

Published by

C. A. Chengalvaraya Naidu,

Curzon Press, Madras.

1916

All Rights Reserved.] [per copy As. 8.

T, 2MKP,V
N16
67965

ஓம்.

# விஜய விலோசனை.

ஒரு நவீன தமிழ் நாடகம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
31 JAN 1917
MADRAS

சதாவதானம்

தெ. கிருஷ்ணசாமிப் பாவலர்

அவர்கள் எழுதியது.

சென்னை,

சி. எ. செங்கல்வராய நாயுடவர்களால்

வெளியிடப்பட்டது.

1916.

சர்வசுதந்தரம் பெற்றது.]

[விலை அணா 8.

1872

891.8112

O-, 2, M K P, V
N16

67965

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
31 JAN 1917
MADRAS

To.

**Rao Sahib Mr. P. Sambanda Mudaliar Avl**

Who is devoting his life for the good of his country men
This volume is, by his kind permission respectfully dedicated

By the Author.

ஓம்:

# விஜயவிலோசனை.

## நாடக பாத்திரங்கள்.

| | | |
|---|---|---|
| ஜயசூடாமணி | ... ... | தொண்டைநாட்டதிபதி |
| மாதவசேனன் | ... ... | சோழதேசாதிபன் |
| பாலசூர்யன் | ... ... | சேரநாட்டரசன் |
| விஜயன் | ... ... | ஜயசூடாமணிதம்பிபுதல்வன் |
| சித்திரபாஹு- வச்கரன் } | ... ... | ஜயசூடாமணியின்பிள்ளைகள் |
| கணதேவன் | ... ... | தொண்டைநாட்டுள்ள ஓர்பிராமணன் |
| சுகுமாரன் | ... ... | விஜயனின்தோழன் |
| விலோசனை | ... ... | மாதவசேனனின்மகள் |
| மோஹனை | ... ... | விலோசனையின்தோழி |

மந்திரி, பிரதானிகள், அரசகுமாரர், சேவகர், சோலையாளிகள் முதலானோர்.

### கதை நிகழிடம்.

காஞ்சியும் காவிரிப்பூம் பட்டிணமும்.

# முகவுரை.

நாடகமே நாட்டகத்துச் சிறப்பையுண்டுபண்ணுவது என்னும் உண்மை அறிந்த அறிஞர்பலர் இக்காலத்துப் பலநாடகங்களை எழுதிவெளியிட்டாங்கு, யானும் இதற்குமுன்னர் பிரகலாதன், சாவித்திரி, கமலேசன் முதலாய நாடகங்களை எழுதி வெளியிட்டேன் எனினும், எனது நண்பருட்சிலர், ஒரு புது வகைக்கதை எழுதும் வண்ணம் என்னை வற்புறுத்தியதாலும், நாடகத்தமிழை நல்லன்புடன் போற்றிவளர்க்கும் சென்னை சுகுணவிலாச சபையார், நல்லதோர்நாடகம் எழுதுவார்க்குப் பரிசு கொடுப்பதாகப் பத்திரிகையில் வெளியிட்டிருந்ததாலும், இதனை ஒருவாறு எழுதி வெளியிடலானேன். இந்நாடகமும், ஒருவித சிரமுமின்றி, இடையே எதையும் விடாமல் மூன்று மணி நேரத்துள் நடிக்க உபயோகமாம் வண்ணம் எழுதப் பட்டது.

இதற்குமுன் வெளிவந்த எனது நாடகங்களை அன்புடன் ஏற்ற அறிஞர் பலர்க்கும் எனது மனமுவந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

5, உலகப்பமேஸ்திரி வீதி,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை } தே. கிருஷ்ணசாமிப்பாவலன்.

# விஜய விலோசனை

## முதலங்கம் – முதற்காட்சி

களம்: சோழன் அரண்மனையில் ஓர் சயனகிருஹம்.

காலம்: இரவு.

[விலோசனை ஓர் மஞ்சத்தில் சாய்ந்துகொண்டிருக்கிறாள். தாதிகள் புடைசூழ்ந்து அவளுக்கு உபசாரம் செய்துகொண்டிருக்கின்றனர். மோஹனை என்னும் பாங்கி அருகில் இருந்துகொண்டு தேறுதல் சொல்கிறாள்.]

மோஹனை—அம்மா, தாம் ஏன் வீணுய்த் துயரம் உறுகின்றீர்? தமது காதலர் எப்படியும் வந்து, தமது தந்தை சொல்லியபடி அம்மகரக் குறியை அறுத்தெறிவார். அவருடையமகிமை அறியாமல் இப்படி துயரப்படுகின்றீரே! அவரினும் வில்வித்தையிற் சிறந்தவர், இந்த அவனியில் உண்டோ? அழவேண்டாம் அம்மா வேண்டும் என்றால் என் சொல்லை நம்புமே. எனக்கு நன்றாய்த் தெரியவரும் அவருடைய வீரபிரதாபங்கள் எல்லாம்.

விலோசனை—(எழுந்து)என்னடி மோஹனை, அவர் இங்குவந்த காலத்தில் அன்றோ அவ்வில்லை வளைத்து, என்னை மணம் செய்துகொள்ளப் போகிறார்? அவர் வருவதேமுதலில் சந்தேகமாய் இருக்கிறதே!—ஐயோ, ஏனோ நானும்அவரும் இளமையில் இருந்துபழகிவிட்டோம்! கல்விகற்கச் சென்றதால், காதல் முற்படவேண்டுமா!—தெய்வமே! இவ்வளவும் உன்னுடைய ஆடலோ! நான் என்ன பாவம் செய்தேன் என்று, என்னை இத்துயரத்துக்கு ஆளாகச் செய்கிறாய்? உம், என் விதி, என்விதி—சீ,விதியை எணணுபவர்

மதியீனர் அன்றோ? விதி என்ன செய்யும்; மதி உண்டாயின்? விலோசனா, இன்னும் உனக்கு, தான் என்னும் அகங்காரம் போகவில்லையே. உன்மதிகொண்டு, நீ என்ன காரியத்தைச் செய்துவிட்டாய்?—ஆம், ஆம், வழி அறியாது பல காரியங்களைச் செய்து முடிக்க முயன்று, பின் ஒருபலனையும் காணாமல் அலைந்துவாடும் மானுடர்போல, அவதிக்குத் தான் உள்ளாகின்றேன். உம், என் பிராணநாதரை அடைய எவ்வளவோ முயன்றேனே, ஏதாவது பிரயோஜனப்பட்டதா? அவர் அவ்விடத்தில் இருக்கின்றார்; நான் இவ்விடத்தில் இருக்கின்றேன். மோஹனா, நான் அவர்மீது கொண்டகாதல், உண்மைக் காதல் அல்ல. அவரை யான் காதலித்தது உண்மையாயின், என் எண்ணம் நிறைவேறாதா? நான் என் தந்தையிடம், அவரையே எனக்கு மணாளனாக்க வேண்டும் என்று வேண்டியும், அவர் அப்படி செய்யவே மாட்டேன் என்று ஒரே பிடிவாதமாய்ச் சுயம்வரம் வைத்துக்கொண்டாரே, இது என் துரதிருஷ்டம் தானே?

## விருத்தம்.

என்றனக் கினிய சொல்லி இருந்திடும் மோஹனாவே
அன்றெனக் காசை யூட்டி அருண்முகம் காட்டி நின்றே
சென்றவர் தமது பாத சேவையே செய்து வாழும்
நன்றதைப் பெறேனே யாயின் நங்கையான் செய்வதென்னே!

மோஹனா—அவற்றை எல்லாம் எண்ணி இப்போது ஆவதென்ன அம்மா? உமது தந்தையார் குலமுறைப்படி சுயம்வரம் ஏற்படுத்தினார். அதனால், அவரை நிந்திக்கலாமா?

விலோசனை—நீ சொல்வாய். உனக்கென்ன கூறாமல்? நீயும் என்னைப் போல ஓர் காதலனைப் பெற விரும்பும் காலத்தன்றோ, என் வருத்தம் உனக்குத் தெரியும்? மோஹனா, ஜயசூடாமணி தம் பிள்ளைகளை மாத்திரம் அனுப்புகிறா

ரோ என்னமோ? உம், தம்பியின் பிள்ளையையும் அவ்வளவாகக் கவனிப்பவர்கள், இந்த உலகில் இருக்கிறார்களா?

மோஹனா—அப்படி ஜய சூடாமணியார் செய்யவே செய்யார் அம்மா. தம் பிள்ளைகளினிடத்தில் அவர் வைத்திருக்கும் பக்ஷத்தைப் பார்க்கிலும், விஜயரிடம் வைத்திருக்கும் பக்ஷத்திற்கு அளவே இல்லை. இல்லாவிடின், விஜயரை அவர்சேனாதிபதியாய் வைத்துக்கொள்வரோ, தம் பிள்ளைகளைவிட்டு?

விலோசனை—ஒருகால், என் பிராணநாதரே 'நாம் ஏன் போக வேண்டும்' என்று இருந்து விட்டால்?

மோஹனா—அப்படியும் இருப்பாரா அவர்? என்ன அம்மா, உமக்கு எவ்வளவு பக்ஷம் அவர்மீது இருக்கிறதோ, அவ்வளவு பக்ஷம் உம்மீது அவருக்கு இராதா? இதை எண்ணாது, ஏதேதோ சொல்லி ஏங்குகின்றீரே! இப்படி நாம் வருந்துவது தகுதியல்ல அம்மா.

விலோசனை—தகுதி அல்ல! ஆம், நான் இவ்வுலகத்தில் இருக்கவே தகுதி அற்றவள்! அங்ஙனமாக, என் வார்த்தைகள் மாத்திரம் எப்படி தகுதி உடையன ஆகும்! மோஹனா, நீ சொல்வது உண்மையே. அங்ஙனம் நான் தகுதி உடையவளாயின், என் காதலனை மணந்து களிப்படையேனா! மோஹனா!—

விருத்தம்.

மலைஎனத் திரண்ட தோளெம் மன்னரை மணாளராக
உலகினில் பெறாது வாடி உயிர்விடத்தானோ அந்த
அலையுறும் கரிய மாயன் அளித்தவப் பிரமன் என்றன்
தலையினில் எழுதிவிட்டான் சாற்றுவாய் நீயே தோழி!

மோஹனா—சரி, மறுபடியும் வந்துவிட்டதா, காதலரை மணக்க மாட்டோம் என்னும் எண்ணம்? நான் என்ன என்று சொல்லித் தம்மைத் தேற்றுவது? இன்றிரவை மாத்திரம்

கழித்துவிட்டால், எல்லாம் நாளைய காலைதெரிந்து விடப் போகிறது. இதற்குள் தாம் ஏன் இப்படி சிந்தை கலங்கித் தேகத்தை வாட்டிக்கொள்கிறீர்?

விலோசனை—மோஹனா, இப்போதாவது உண்மையைச் சொல். நான் நாடிய நாதனை நாளை அடைவேனா? பொய் சொல்லாதே; மெய்யாகச் சொல். உண்மையில் அவர் வந்து என்னை மணந்து போவாரா?

மோஹனா—எத்தனை முறை சொல்வதம்மா? நான் தான் சொல்கிறேனே, அவர் எப்படியும் நாளையதினம் வந்து சேர்வார். இனி என் வார்த்தையிலாவது சிறிது நம்பிக்கை வைத்து வருந்தாமல் இருமே. வேண்டும் என்றால் பாரும் என் சொல்லை.

விலோசனை—உம், பார்ப்பதென்ன! எத்தனையோ ஊர் அரசர்கள் எல்லாம் வந்திருக்கிறார்களே. வருகிறவர் ஆனால், அவரும் அவர்களுடன் வந்திருக்கமாட்டாரா? வீண் யோசனை இது.

மோஹனா - அம்மா, தாம் அவர் வரும் விஷயமாய் சங்கை கொள்கிறீரா? உம், ஒளிப்பதென்ன இன்னும்? அவர் உம்மை அன்றி வேறொருவரையும் விவாகம் செய்துகொள்வதில்லை என்று பிரமாணிக்கம் செய்திருக்கின்றார். போதுமா?

விலோசனை :—என்ன! என்ன!

மோஹனா—அப்பா! இப்போதன்றோ சந்தோஷம் பிறந்தது?

விலோசனை—மோஹனா, நீ சொல்லியது உண்மையா?

மோஹனா—இதிலுமோ பொய் சொல்வேன்?

விலோசனை—உனக்கெப்படி தெரியும், அவர் பிரமாணிக்கம் செய்தது?—சொல்லடி என்றால்—

மோஹனா—இன்னும் என்ன சொல்லச் சொல்கிறீர் அம்மா. பெயரைப் பார்த்தாலே தெரியவில்லையா? பெயர்ப் பொருத்தமும் சரியாய் விட்டதே, இன்னும் என்ன?

விலோசனை—மோஹனா, விளையாடுகின்றாயா என்ன?

மோஹனா—பார்த்தீரா, கோபித்துக் கொள்ளலாமா இதற் கெல்லாம்?

விலோசனை—மற்றென்னே? உண்மையைச் சொல்லடி என்றால்?

மோஹனா—உண்மையைத் தானே சொல்லினேன். அவர் எப் படியும் வருவார்.

விலோசனை—வரா விட்டால்?

மோஹனா—வரமாட்டார்.

விலோசனை—பார் இதோ, நான் போய் என் தந்தையிடம் சொல்கிறேன். விளையாடுகிறாயா என்ன என்னுடன்? (செல்கிறாள்)

மோஹனா—அப்புறம் நீங்கள் விஜயரை விவாகம் செய்து கொள்வீர்.

விலோசனை—இல்லை, இல்லை. மோஹனா, உனக்கெப்படியடி தெரியும், அவர் பிரமாணிக்கம் செய்த விஷயம்?

மோஹனா—சுயம்வர ஓலையைக்கொண்டு போனவன் சொல்லக் கேட்டேன். 'அம்மங்கையின் தோள் மற்றையோருக் காகாவண்ணம், யானே அதனை மணக்கின்றேன்' என்று சபதமும் செய்துகொண்டாராம் அவர்.

விலோசனை—அப்படியா?—விலோசனா, நீ அன்றோ பாக்கிய வதி?—மோஹனா, இவ்விஷயத்தைக்கூறிய உனக்கு நான் என்னடி கைம்மாறு செய்யவல்லேன்? அஃதிருக்கட்டும், அவர் வந்து வில்லை விளைத்து விடுவார் அல்ல?

மோஹனா—அல்ல.

விலோசனை—பார் மறுபடியும். சொல்லடி என்றாள்—

மோஹனு—அவரால் விளக்கவே முடியாதம்மா. நான்சொல்லினேனே, பாரும் நீர் வேண்டுமானல்.

விலோசனை—என்னடி இப்படி சொல்கின்றனையே ? பிறகு ?

மோஹனு—பிறகு என்ன ? உடைத்து விடுவார்.

விலோசனை—(புன்சிரிப்புடன் மோஹனுவை அணைத்து) மோஹனு, நீயே என் மனதுக்கிசைந்த தோழி. வா நாம் நிலா முற்றம் சென்று வேடிக்கையாய்க் காலம் போக்கலாம்.

மோஹனு—செய்யுங்கள் அம்மா.

[எல்லோரும் செல்கின்றனர்.]

---

## முதலங்கம் — இரண்டாங்காட்சி

**களம்: காவிரிப்பூம் பட்டிணத்தில் வேற்றரசர்கள் தங்கும் ஓர் அறை-காலம்: காலை.**

**சித்திரபாஹு**—எண்ணியாங்கு வந்து விட்டோம்—என்ன—இங்கு ஒருவரையும் காணோம்! ஓஹோ, அறிந்தேன்—ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் விடுதி ஏற்பாடாய் இருக்கின்றதன்றோ? ஆம், வரும் வழியில் ஜய சூடாமணியைச் சார்ந்தார்இடம் என எழுதி இருந்தது. அதையும் இவ்வளவு சீக்கிரத்தில் மறந்தேன். மன மொன்றைப் பற்றி நிற்கும்போது மற்ற ஒன்றை எங்ஙனம் பற்றும்?—சீ சீ, என்ன ஏக்கம்! எங்கே விஜயன் வந்து விடுகின்றானோ என்று ஒவ்வொரு க்ஷணமும் எதிர்பார்க்கின்றதே என் மனம்—இது என்ன எண்ணம்? அவனு வது வருவதாவது! அவன் வராதவாறு நான் எவ்வளவோ தந்திரங்களைச் செய்திருக்க அவன் அவற்றையும் மீறி வருவனோ? ஒருவேளை! அவன் அத்தந்திரங்கட்கு உட்படாமல் வந்துவிட்டால்?—ஆஹா! அவன் ஒருவனால் எனக்கு என்ன என்ன கஷ்டங்கள் உண்டாய் உள்ளன? இப்போது இராஜ்ஜியம் எல்லாம் என் தந்தையின் வசம் இருந்தும், இந்த விஜயனுக்கு நான் அடங்கி இருக்க வேண்டியதாயிற்றே! என்ன ஆச்சர்யம்! நான் மாத்திரமோ? என் தம்பிவசீகரனும் அப்படி இருக்கின்றான்—வசீகரா, (திரும்பிப்பார்த்து) வசீகரா!—எங்கே என்னுடன் வந்தவன்!—இதுஒரு பைத்தியம். இதைக் கட்டிக்கொண்டு அழுகிறது எனக்குப்போதும் என்று போகின்றது. போயும் போயும் இந்தத் தத்தி என்னுடைய தம்பியாய்ப் பிறக்கவேண்டுமா! இப்போது என்னுடன் வந்தவன் இதற்குள்ளாக எங்கேயோ போய்விட்டான்? யார் அது!—விஜயனோ!—அந்தோ அந்தோ! நான் என் ஒவ்வொரு க்ஷணமும் அந்த விஜயன் பொருட்டுப் பயம் எய்துகின்றேன் என்பது, எனக்கே ஆச்சர்ய

மாக இருக்கின்றது. அவன் வீரனுய் இருந்தால், அவன் வீரம் அவன் வரை நிலேத்திருக்கப் போகின்றது. அவன் வீரம் என்னே என்ன செய்துவிடும்? எல்லாம் என் தந்தை வசப்பட்டிருக்கும்போது, அவன் என்ன தீங்கை எனக்குச் செய்யவல்லான்? ஆயினும், அவன் உயிருடன் இருக்கும் ஒவ்வோர் க்ஷணமும் என்னேப் பெரிதும் வருத்தும் யுகங்கள் போலத் தோற்றுகின்றதே. இல்லாவிடின், எங்களுக்கு வந்த சுயம்வர ஓலேயைக்கண்டு, 'நானே மணமுடித்துக் கொள்கின்றேன்' என்று சபதம் கூறுவானே? உம், இவ்வளவும் என் தந்தையால் வந்தவையே ஆகும். இல்லாவிடின், அவன் அவ்வளவு செருக்குடன் திரிவானே? அவனே ஒரு மஹாவீரன் என மதித்து, மைந்தர் எங்களேயும் பாராது, அவர் அவனுக்குச் சேனுதிபதி உத்தியோகம் கொடுத்தனர். நன்ருய் இருக்கின்றது! நாங்கள் இருவரும் வீணர்கள்; அவன் மாத்திரம் வீரன்! சீ, என்ன இது! எதை எதையோ யோசித்துக் காலத்தை வீண் ஆக்குகின்றேன். இவற்றை எல்லாம் இப்போது எண்ணி ஆவதென்ன?—ஆம், விஜயன் எப்படியும் வருவான். அவன் ஒரு வேளே என் தந்திரங்களுக்குக் கட்டுப்படினும் அவனுடைய நண்பன்—அச்சுகுமாரன்—அவனேக்கட்டுப்படச் செய்யான். ஆயின், இப்போது நான் என்ன செய்வது?—விஜயன் எப்படியும் வந்து சேர்வான். அவனே ஒழிக்காவிட்டால் விலோசனேயை யான் மணப்பேன் என்பது முடியாத காரியம். அவனேயன்றி வேருெருவர் அவ்வில்லே வளேக்கவே முடியாது என்பதும் எனக்கு நன்ருய்த்தெரியும். அவன் இல்லாமற்போனல், மரியாதைக்காக ஆவது எனக்கே சோழன் தன் மகளேக் கொடுப்பான்—ஐயோ, அப்பாபி என் சுகத்திற்குமோ பங்கம் செய்ய வரவேண்டும்! இப்போது என்ன செய்வது?—ஆம், நல்ல யோசனே. வரும் வழியில் பால சூர்யனேப் பார்த்தேன் அன்ருே? அவன், தன்னேவிட வாள் வித்தையில் கெட்டிக்காரன் உலகில் ஒருவனும் இல்லே என்று சொல்லிக்கொள்கின்ருன். நானும் பார்த்தவரையில் அவனே வாள்வித்தையில்

சிறந்தவன் என்றேசொல்வேன்.—ஆம்,அவனை இவ்விடம் வரவழைத்துப் புகழ்ச்சியாய்ப் பேசிக்கொண்டிருக்கின் றேன். விஜயன் வந்தாலும் இவ்விடந் தானே வரவேண் டும்? அவன் வரும்போதும், பாலசூர்யனைப் புகழ்ந்து சொல்கிறேன். அதைக்கேட்டு விஜயன் சும்மா இரான். நானும் அடிக்கடி கோபத்தை மூட்டத் தூண்டுகோளாய் இருந்துவிட்டால், அவ்விருவருக்கும் வாட்போர் நேரும் என்பதற்குச் சந்தேகமேஇல்லை. எப்படியும் பாலசூர்யன் விஜயனைக் கொன்று விடுவான். பிறகு என்காரியம், நிறைவேறத் தடையே இல்லை. ஆம், இதுவே நல்ல யோசனை—இதோ வருகிறான் தத்தி. அடே வசீகரா, எங்கே போயிருந்தாய் நீ?

வசீகரன்—அண்ணாத்தே, அப்புறம், என்னைப் பாரும், அப் புறம்.—

சித்திரபாஹு—ஒழிந்தது. இந்த அப்புறம் என்பதை என்று தான் விடப்போகிறாயோ தெரியவில்லை; அவலக்ஷணம்.

வசீகரன்—அப்புறம், நான் எப்படி இருக்கிறேன் உங்கள் கண்ணிற்கு? நான் மாப்பிள்ளையைப் போல, இருக் கிறேன் அல்ல?

சித்திரபாஹு—சரியாய்ப் போயிற்று—ஆம், நீ மாப்பிள்ளை யைப் போலத் தான் இருக்கிறாய்.

வசீகரன்—அப்புறம், என்னை இராஜகுமாரி பார்த்தால் அதிக ஆசைப்படுவாள்! அப்புறம், ஏன் அண்ணாத்தே, ஆசைப் படமாட்டாள்?

சித்திரபாஹு—ஆம், ஆசைப்படுவாள். அஃதிருக்கட்டும்; பால சூர்யனை அறிவாய் அன்றோ நீ?

வசீகரன்—அப்புறம்.—

சித்திரபாஹு—அப்புறமாவது?—நான் வரும் வழியில் அவ னைப் பார்த்தேன். அவனிடம் நீ சென்று, அவனை நான்

அழைத்துவரச் சொல்லியதாகச் சொல்லி அழைத்துக் கொண்டுவா, விரைவில்.

வசீகரன்—ஆகட்டும், அப்புறம் என் மீசையை இப்படியே வைத்துக் கொள்ளவா அல்லது, இப்படி முறுக்கி.—

சித்திரபாஹு—சீ, நான் சொல்லியதைச் செய்.

வசீகரன்—ஊம், அப்புறம் நான் கேட்கிறேனே.

சித்திரபாஹு—நீ போகிருயா (வாளையுருவி) அல்லது—

வசீகரன்—இல்லே, போகிறேன் இதோ. அப்புறம்—

[வசீகரன் போம்போது பாலசூர்யன் வருகிருன்.]

அண்ணத்தே, அண்ணத்தே, அப்புறம் இதோவந்துவிட்டார்.

சித்திரபாஹு—வரவேண்டும், பாலசூர்யா. நீ அதிருஷ்டக்காரன். உன்னேத்தான் காண, ஆள் அனுப்பலாம் என்று இருந்தேன். நீயே வந்து விட்டாய். உன் தந்தை இறந்தாலும் இறந்தார், இராஜ்ஜியத்திற்கு அதிபதியாய் இஷ்டப் பிரகாரம் இருக்கிருய் நீ. எனக்கப்படி இல்லே! எத்தனே கஷ்டம் அனுபவிக்க வேண்டி இருக்கிறது தெரியுமா? உம், அந்தப்பேச்செதற்காக இப்போது?—நீ வாள் வித்தையில் தேர்ந்தவன் என்கிருயே, என் தம்பியோடு எதிர் நிற்பையா?

பாலசூர்யன்—யாருடன்? (வசீகரனேச்சுட்டி) இவனேடா?

சித்திரபாஹு—சீசீ, விஜயனுடன்.

பாலசூர்யன்—விஜயனேடா? சித்திரபாஹு, விஜயன் என்ன அவ்வளவு வீரனு? எத்தகைய வீரர்களேயும் இக்கையால் மாளவைத்திருக்கும் நானே, அவனே ஒரு பொருளாக மதிப்பேன்? அதைப்பற்றி இப்போதென்ன? வேறெதையேனும் பேசுவோம்.

சித்திரபாஹு—இல்லை; ஒருநாள் உன்னைப்பற்றி அவனுடன் பேசியபோது, அவன் உனக்கென்ன வாட்போர் தெரியும் என்று சொல்லினனே.

பாலசூர்யன்—என்ன ! அப்படியா அவன் சொல்லினன் ?—என்னையா ?

சித்திரபாஹு—ஆம், உன்னைத் தான் சொல்லினன்.

பாலசூர்யன்—அதற்கென்ன, பார்ப்போம்.

[விஜயன் சுகுமாரனுடன் வருகிறான்.]

வசீகரன்—அப்புறம், அண்ணாத்தே, அதோ விஜய அண்ணாத்தே.

பாலசூர்யன்—சித்திரபாஹு, என்னை இந்த உலகில் வாள் வித்தையில் தோற்கடிக்கும் ஆண்மகனும் ஒருவன் உண்டோ ?

விஜயன்—(ஒருபுறமாய்) சுகுமாரா, என்ன சொல்லினன் அவன் ?

சுகுமாரன்—அரசே, தமக்கென்ன அதைப்பற்றி ?

பாலசூர்யன்—வாளைக்கரத்தில் எடுத்து, என் முன்வரவும் எவனுக்காவது திடம் உண்டோ? சொல்லிக்கொள்ளலாம் என்னைவிடக் கெட்டிக்காரன் இல்லை என்று!

விஜயன்—விடுஎன்னை (சுகுமாரன், வாளைப்பிடுங்கிக் கொள்கிறான்)—பாலசூர்யா, என்ன சொல்லினை ?

பாலசூர்யன்—நீ என்ன அதைக்கேட்பது? திடம் உண்டானால், எடு உன்வாளை.

விஜயன்—ஆ ஹா ! கொடுவாளை (வாளைச் சுகுமாரனிடம் வலிவுடன் வாங்கி) அடே வந்து நில் எதிராய்.

பாலசூர்யன்—அடே, இதோ உன்னை மண்ணிற்கிரையாக்குகின்றேன் பார்.

சுகுமாரன்—அரசே, அவன் அறியாமையோடு சொல்வதைத் தாம் ப்ாராட்டலாகாது ; பொறும். (தடை செய்கிறான்.)

விஜயன்—நில்லாதே எதிரில் (தள்ளி) அடே, அறிகிறேன் உன்னை ; வா பார்ப்போம்.

[இருவரும் வாட்போர் செய்கின்றனர். கடைசியில் பால சூர்யன் கீழே வீழ்ந்து விடுகிறான்.]

சுகுமாரன்—அரசே, போதும் விட்டு விடும். அவன் என்ன உமக்கு ஒரு எதிரியா ? வாரும், அரசே.

விஜயன்—ஆம் (வாளை வீசி எறியச் சுகுமாரன் எடுத்துக் கொள்கிறான்) அற்பனே, பிழைத்துப்போ. இனி ஒருவரிடமும் வீரன் என்று புகழ்ந்துகொள்ளாதே, போ. [போகிறான்]

[சுகுமாரனும் அவனைப் பின்பற்றிப்போகிறான்.]

பாலசூர்யன்—(நடுக்கத்துடன் எழுந்து) அப்பா ! தெரியாமற் சொல்லினேன்.

வசீகரன்—அப்புறம்.—

சித்திரபாஹு—சீ ! அப்புறமாம்.

பாலசூர்யன்—அப்பா ! போதும், போதும் நான் விஜயனைப் போன்ற வீரனைப்பார்த்ததே கிடையாது.

சித்திரபாஹு—பாலசூர்யா, இவ்வளவு தானா ? பைத்தியக் காரன் நீ. நான் சொல்வதைக்கேள். இதற்குள் பயந்து போய் விடலாமா ?

பாலசூர்யன்—என்ன சொல்லப்போகிறாய் ? அப்பா ! பட்டது போதும்.

வசீகரன்—அப்புறம், ஏனையா பாலசூர்யரே, அப்புறம், எங்கே காயம்பட்டது ? பாபம், நோகிறதா ?

பாலசூர்யன்—அதுவரையிலும் பிழைத்தேனே.

சித்திரபாஹு—பாலசூர்யா, நான் அவனைத்தோற்கடிக்கும் உபாயத்தைச் சொல்கிறேன் வா. வெட்கம் இல்லையா உனக்கு ? நீ வா, பிறகு தெரிவிக்கிறேன்.

[மூவரும் செல்கின்றனர்.]

# முதலங்கம் — மூன்றாங்காட்சி.

**களம் : காவிரிப்பூம் பட்டிணத்தில் சுயம்வர மண்டபம்.**

**காலம்—காலை.**

[சுயம்வர மண்டபத்தில் எல்லா அரசகுமாரர்களும் உட்கார்ந்திருக்கின்றனர். மாதவசேனன் தன் மந்திரி முதலானோருடன் ஓர் புறமாய் இருக்கிறான்.]

மாதவசேனன்—மந்திரி, எல்லோரும் வந்து விட்டார்கள் அன்றோ?

மந்திரி—ஆம், எல்லோரும் வந்திருக்கின்றனர். ஆனால்—

மாதவசேனன்—ஆனால், என்ன இன்னும்? ஆரம்பிக்கவேண்டியது தான். நமது குழந்தையை அழைத்து வரும்படி தாதிகளுக்குச் சொல்லினையா?

மந்திரி—அப்போதே சொல்லினேன் அரசே.

மாதவசேனன்—அப்படியா? ஆயின், ஏன் இன்னும் வரவில்லை அவர்கள்? இலக்கினம் வந்து விட்டதே.

[விலோசனையைத் தாதிகள் அழைத்து வருகின்றனர்.]

மந்திரி—அரசே, அதோ அவர்களும் வந்து விட்டனர்.

மாதவசேனன்—சரி—(தன் ஆசனத்தை விட்டெழுந்து) சபையோர்களே! இன்று உங்களை எல்லாம்நான் அழைத்தவிஷயம் இன்னதென்று உங்களுக்குத் தெரியவரும். ஆயினும் என் முறைப்படி சொல்லி விடுகின்றேன். இதோ உங்கள் எதிராக வந்து நிற்கும் மங்கை, என் அருந்தவத்துதித்த பேருகும். இதன் அறிவிற்கும் அருங்குணத்திற்கும் ஏற்ற நாயகனைத் தேடுவிப்பது, என் வேலையாதலால், அதன் பொருட்டே, உங்களை எல்லாம் இவ்விடம் அழைத்தேன். யார் இதோ கீழாக வைத்திருக்கும் வில்லை

எடுத்து வளைத்து, நாணேற்றி, அம்பினைப்பூட்டி, அதோ மேலாகக் கட்டியுள்ள மகரக்குறியை எய்கிறார்களோ, அவர்களுக்கே என் மகளைக் கொடுக்க இப்போது இசைந்திருக்கின்றேன். ஆனால், உங்களுக்கு இந்த வில்லினுடைய பெருமை தெரியாததலால், அதனையும் சொல்லி விடுகிறேன். இவ்வில்லைச்சாமானியமானதென்று எண்ணவேண்டாம். இதனைச் சிறிது முன் எழுபது மல்லர்கள் அதிக சிரமத்துடன் இவ்விடத்திற்கொண்டுவந்து வைத்தனர். மிகவும் பலம் உடையது. இதனை வளைக்க எண்ணுவோர் மஹா சாமார்த்தியமும் தேக பலமும் உடையவர்களாக இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களாலேயே, இவ்வில் வளைபடும். இதனை என் தந்தையாருக்கு அவருடைய ஆசிரியர் ஞாபகப் பொருளாய்க் கொடுத்தனர். இது விஷயத்தில் யான் ஒன்று சொல்ல மறந்தேன். இவ்வில்லை வளைக்க வந்த அரசர் பலர், என் தங்கை சுயம்வரத்தில், அதிக சிரமும் காயமும் அடைந்தனர். அதனை இப்போதே சொல்லிவிட்டேன். யாருக்குத் திடம் இருக்கிறதோ அவர்கள் வந்து வளைக்கலாம். அதனால் ஏதாவது தீங்கு நேர்ந்தால், பிறகு என்மீது பழி சுமத்தலாகாது. இதுவே யான் சொல்லி முடிப்பது. (தன் ஆசனத்தில் அமர்கிறான்.)

பாஞ்சால இளவரசன்—(எழுந்து வந்து) இப்போது நமது மாதவசேனர் சொல்லியவிஷயங்களை எல்லாம் சாவதானமாகக்கேட்டோம். நாம் இனி செய்யவேண்டியது என்ன என்று யோசிப்பதே நமது கடமை. இப்போது யார் இவருடைய புதல்வியை விரும்புகிறார்களோ அவர்கள் தானே வில்வளைக்கப்போகவேண்டும்? எனக்கோ அப்படி ஒன்றும் பிரியம் இல்லை. ஆகவே நான் போய் விடுவதில் ஓர் ஆக்ஷேபணையும் இல்லையே ? (தன் ஆசனத்தில் அமர்கிறான்.)

மாதவசேனன்—(எழுந்து) இப்போது பாஞ்சால தேசத்தரச குமாரர் கேட்ட கேள்விக்கு நான் விடை சொல்லவேண்டியதே அனுவசியம். ஆயினும், நாம் இங்கு எல்லோரை

யும் வரவழைத்தது எது பற்றி என்பதை அவர் அறிந்திருந்தால், இக்கேள்வியைக்கேட்டிரார். சுருங்கச்சொல்லுமிடத்து, இஷ்டம் இல்லாதவர் இங்கு வரவேண்டிய நிமித்தமே இல்லை அன்றோ! (இடத்தில் அமர்கிறுன்.)

குர்ஜரராஜகுமாரன்—(எழுந்துவந்து) இவர் சொல்லியதைப் பார்த்தால் இஷ்டப் பட்டவர்கள்தான் இவ்விடத்தில் வரவேண்டும் என்று ஏற்படுகிறது. எனக்கோ முதல் விவாகம் ஆயிருக்கிறது. ஆகவே, இரண்டாம் விவாகம் செய்துகொள்ள எனக்கு ஒருவாறு இஷ்டம் இல்லை. நான் மாத்திரம் அல்ல, இன்னும் இங்கிருப்பவர் சில ரோடுகலந்து பேசிய விஷயத்தில், பலரும் வேடிக்கை கண்டு போகலாம் என்று வந்ததாக ஏற்படுகிறது. ஆதலால், இவர் ஒரே தீர்மானமாக இஷ்டப்பட்டவர்கள் தான் வரவேண்டும் என்று சொல்லியது அவ்வளவு சீரியதாக எனக்குப் புலப்படவில்லை. (உட்காருகிறுன்)

மாதவசேனன்—சரி, இது விஷயங்களைப்பற்றிப் பேசுவதால் காலதாமதம் ஆகிறது—மந்திரி, நீ சென்று ஒவ்வொருவரையும் கேள்.

மந்திரி—அப்படியே அரசே.

வசீகரன்—(எழுந்து)அப்புறம்,நில்லுங்கள் ஒருவிஷயம். (முன் வந்து) அப்புறம் ஆமாம், இவர் சொல்லியபடி யார் அந்தக் குறியை எய்கிறுர்களோ, அவருக்குத் தமது குமாரத்தியைக் கொடுக்கப்போவதாய்த் தெரிகிறது. அப்புறம்—ஆம் ஐயா ஒருவர் எய்யத்தவறி விட்டார். அப்படித் தவறிப்போனவருக்கு இவர் என்ன கொடுக்கப் போகிறுர்? (எல்லோரும் நகைக்கின்றனர்.) இப்போது சிரிக்கமாட்டீர்களா? நான் கேட்ட பிறகு தானே சிரிக்கிறீர்கள்? அப்புறம் இந்த யோசனை உங்களுக்கு முன்னமே இல்லாமற் போயதே. எனக்கு எப்போதும் காரியத்திலேயே கண்டம். அப்புறம் என்ன சொல்லப்போகிறுர் இவர் என் கேள்விக்கு? (உட்காருகிறுன்.)

மாதவசேனன்—இதற்கு பதிலே கிடையாது—மந்திரி, ஆகட்டும்.

மந்திரி—(சென்று) என் விதர்ப்ப ராஜகுமாரரே, என்ன சொல்கிறீர்?

வி-இ—ஐயா மந்திரியாரே, நான் என்னவோ இந்த வில்லை வளைத்து விடுவேன். அது விஷயத்தில் எனக்கு சாமர்த்தியம் இல்லை என்று எண்ணவேண்டாம். ஆனல், நான் வரும்போது பூனை குறுக்காக வந்தது. அதைப் பற்றியே யோசிக்கிறேன்.

மந்திரி—முடிந்தது—தாம் என்ன சொல்கிறீர், கர்னடக இராஜகுமாரரே!

க-இ—அவர்களை எல்லாம் கேளுங்கள்; எனக்கு நேற்றிரவிலிருந்து ஜலதோஷம் பீடிக்கிறது.

மந்திரி—விட்டு விட்டேன்,—தாங்களோ, அங்கநாட்டிளவரசே!

அ-இ—(யோசித்து) மந்திரியாரே, நான் வரும்போது வழியில் ஒருகல் தடுக்க இடறினேன். அதுகெட்ட சகுணம் என்று எனக்குப் படுகிறது. தாங்கள் என்ன சொல்கிறீர்?

மந்திரி—ஆம், ஆம், வேண்டாம்—உம்முடைய தீர்மானமோ, சேரநாட்டதிபதியே?

பாலசூர்யன்—அதற்கென்ன? (அப்படியே ஆகட்டும். (வில்லிடம் சென்று, அதனை எடுக்க முயல்கிறுன். முயலாமை கண்டு) இதையாராவது எடுத்து நிற்கவைத்தால், நான் வேண்டுமானல் அதன்பின் அக்குறியை எய்கிறேன்.

மந்திரி—சரி, அப்படி அரசர் தெரிவிக்கவில்லை முன்னம். வந்திட்டாரும்—நீர் என்ன சொல்கிறீர், சிங்கள இராஜகுமாரரே.

சி-இ—எனக்கு வேண்டாம் ஐயா. இருக்கவே இருக்கிறுர்கள் இரண்டு மனைவிமார் எனக்கு. அவர்களே போதும். கல்லைக் குத்துவானேன் கைநோவானேன்?

மந்திரி—அதுவே சரி—ஐயா, வங்க ராஜகுமாரரே, தாமோ?

வ-இ—நான் வரும்போது சிறிது மழை. அது கெட்ட சகுனம் ஆயிற்றே என்று யோசிக்கிறேன்.

மந்திரி—நல்லது—மகததேசத்தரசே,—தாம்சொல்வதென்ன?

ம-இ—(தன் பக்கத்தில் இருக்கும் சிங்கள இராஜகுமாரரைப் பார்த்து) நீர் நான் எழுந்திருக்கும்போது, தயவு செய்து தும்புங்கள்.

சி-இ—அப்படியே ஆகட்டும்.

ம-இ—ஓ! என்ன கேட்டீர்.

மந்திரி—ஒன்றும் இல்லை. வில்லை வளைக்க—

ம-இ—அதற்கா? இதோ வளைத்து விடுகிறேன். இது ஒரு பெருங் காரியமா? (பொடிபோட்டுக்கொண்டு) இந்த வில்லை வளைக்காமற் போனால் என்ன இருக்கிறது (எழுந்து போகிறான். தும்மல் சப்தம் கேளாததால், சிங்கள இராஜகுமாரன் முகத்தைப் பார்க்கிறான். அவன் இரக்கம் கொண்டு தும்ப) ஐயோ! பார்த்தீரா இனி நான் போகேன். என்ன ஐயா போம்போது தானா தும்பவேண்டும்? (வந்து விடுகிறான்)

சி-இ—என்ன ஐயா என்மீது கோபித்துக் கொள்கிறீர்? நீர் தானே தும்பச் சொன்னீர்?

ம-இ—(எல்லோரும் நகைக்க) சீ, இங்கிருப்பதே கூடாது. மானம் போகிறது. (போகிறான்)

மந்திரி—(அவனை உட்காரவைத்து) ஐயா, கோபித்துக்கொள்ளாதீர், உட்காரும்—சரி, இனியார் தான் வந்து வில்லை வலைக்கப்போகிறீர்? ஓ, நமதுதொண்டைநாட்டிளவளசர் இருக்கிறார். ஐயா, தாம் என்ன சொல்கிறீர்?

சித்திரபாஹு—சொல்வதென்ன?

[சித்திரபாஹு எழுந்து செல்கிறான். விஜயன் தன் தோழனுடன் வருகிறான். சித்திரபாஹு வில்லை எடுத்து வளைக்கும் போது, அவ்வில்நுனி அவன் மோவாய்க் கட்டைமேல் உதைய கீழ் வீழ்கிறான்.]

மாதவசேனன்—ஆ ஆ, மந்திரி, உடனே அவருக்கு வேண்டிய உபசாரம் செய்யச் சொல்லும்.

மந்திரி—(அவனருகிற் சென்று தேற்றி) இப்போதெப்படி இருக்கிறது?

சித்திரபாஹு—(சிறிது தெளிந்து) ஒன்றும் இல்லை (எழுந்து மெதுவாய்த் தன் ஆசனத்தமர்கிறான்.)

சுகுமாரன்—(ஒருபுறமாய் விஜயனிடம்) அரசே, பார்த்தீரா அவர் அறியாமையை! அவர் எண்ணமே அவரைக் கெடுக்கிறது.

விஜயன்—ஆம், சுகுமாரா.

சுகுமாரன்—மற்றோர் முனையை இழுகப் பிடித்தால், அது முன்னுக்கே வந்திராது. அவ்வளவும் அவசரம். உம், தங்களுக்கென்றிருக்கிறதே.

மந்திரி—சரி, எல்லோரும் பார்த்தாயது. இனிஒருவரும் இல்லையோ?

விஜயன்—ஐயா, இல்லை என்று சொல்லாதீர். எவரே ஆயினும் இவ்வில்லை வளைக்கலாம் அன்றோ? எனதண்ணன் முயன்றதால் கேட்கிறேன்.

மந்திரி—(தன் அரசனைப் பார்த்து) மஹாராஜா, என்ன சொல்கிறீர்?.

மாதவசேனன்—யாராயினும், பாதகம் இல்லை. வளைத்து, அக்குறியை எய்யவேண்டியதொன்றே யான் வேண்டுவது.

விஜயன்—அப்படியாயின், யான் எய்யத் தடையில்லையே?

மாதவசேனன்—என்ன தடை? ஒன்றும் இல்லை.

விஜயன்—ஆயின், பாரும் இதோ (சென்று வில்லைவளைத்து மகரக் குறியை அறுத்தெரிகிறான்.)

[விலோசனை அவனுக்கு மாலை சூட்டுகிறாள். எல்லோரும் 'மங்களானிபவந்து, என்று ஆசீர்வதிக்கின்றனர்.]

---

## முதலங்கம் — நான்காங்காட்சி.

காலம்: பிற்பகல் - களம்: காஞ்சி அரண்மனை.

கணதேவன்—வாருங்கள் ஐயா, வாரும். ஏது, போனகாரியம் எப்படி? பதினறிலோ?

வசீகரன்—என்ன ஐயா பதினறில்?

கணதேவன்—அது தான் ஐயா, அப்புறம்.

வசீகரன்—அப்புறம், நான் சொல்கிறேன் கேளுமே.

கணதேவன்—ஆஹா கேட்கிறேன். தாங்கள் சொல்வதை நான் கேளாமலும் இருப்பேனு? காத்துக்கொண்டிருக்கிறேன்; சொல்லுங்கள், அப்புறம்.

வசீகரன்—அப்புறம்—

கணதேவன்—நிறுத்தும் ஐயா, இந்த அப்புறத்தைத் தானு கேட்கச் சொன்னீர்? உம், அது உங்கள் குற்றம் அல்ல. உங்கள் (தலையைச் சுட்டி) அதில் ஒன்றும் இல்லை.

வசீகரன்—என்ன?

கணதேவன்—(வசீகரன் தலையைத் தடவி) இந்த இடம் குடிகூலிக்கு விடப்படும் என்று ஓர் எட்டில் எழுதிக் கட்டிக் கொள்கிறது தானே.

வசீகரன்—ஏனையா, எனக்கு மூளை இல்லை என்றுசொல்கிறீர்?

கணதேவன்—சேசே! எந்த புத்திசாலி மடையன் சொல்வான் உமக்கு மூளை இருக்கிறதென்று? புத்திதான் இல்லை.

வசீகரன்—எனக்கா ஐயா புத்தி இல்லை?

கணதேவன்—கேட்பானேன்? உங்களுக்கும் புத்தி இல்லை என்று எவனுவது—புத்தியில்லாதவன் சொல்வானு? உம், அப்புறம்.

வசீகரன்—அப்புறம்—

கணதேவன்—அப்புறம் நீங்கள், அப்புறம் சுயம்வரமண்டபத்தில், அப்புறம் உதைபட்டு, அப்புறம் வந்தீரா என்று கேட்கிறேன்.

வசீகரன்—அப்புறம், ஏன் ஐயா நானு உதைபட்டேன்? இல்லையே. என் உடல் முழுவதையும் பாருங்கள் வேண்டுமானல்; எங்கேயாவது காயம்பட்டிருக்கிறதா என்று.

கணதேவன்—உம், அப்புறம்.

வசீகரன்—அப்புறம்—

கணதேவன்—போதும் போதும். அப்புறத்தை அப்புறத்தில் கொட்டி அழாதீர்.

வசீகரன்—நான் அழவில்லையே ஐயா.

கணதேவன்—அதோ அழுகின்றீர்; அழவில்லை என்று பொய் சொல்கிறீரே.

வசீகரன்—ஏதோ ஐயா! என் கண்ணில் தண்ணீர் வருகிறதா என்ன?

கணதேவன்—ஆம், அதற்காகத் தான் நான் அப்படி சொல்லினேன்.

வசீகரன்—அப்படியா?—ஆமாம் ஐயா, ஏனையா தண்ணீர் வருகிறது?

கணதேவன்—அது ஓர் பித்தத்தைச் சேர்ந்த வியாதி. தெரிகிறதா நான் சொல்கிறது? ஏன் ஐயா? இதை இப்படியே விட்டால், பிறகு பிரமாதமாய் முடியும். அப்புறம் குருட்ராய்ப் போய்விடுவீர்.

வசீகரன்—அப்புறம்—

கணதேவன்—அப்புறம்—

வசீகரன்—அப்புறம்—

**கணதேவன்**—பேஷ், நன்றாய்ச் சொல்லிக் கொடுத்தபடி, பாடம் ஒப்பிக்கின்றீர். அஃதிருக்கட்டும், இப்போதே உமது கண் குருடாய்ப் போய்விட்டதே, என்ன செய்யப் போகிறீர் ?

**வசீகரன்**—ஏனையா மெய்யாகவா ?

**கணதேவன்**—மெய் யென்றும் கேட்கவேண்டுமா? நான் தான் சொல்கிறேனே. உமக்கே தெரியவில்லையா, உங்கள் கண் பொட்டையாய்ப் போன விஷயம் ?

**வசீகரன்**—ஆமாம் ஐயா, குருடாய்ப் போய்விட்டாற் போல தான் தெரிகிறது.

**கணதேவன்**—அப்புறம் ?

**வசீகரன்**—அப்புறம், என்ன ஐயா செய்கிறது ?

**கணதேவன்**—(ஒரு புறமாய்) இந்த முண்டம், வீரசிங்கமாம் விஜயர் மணந்த விலோசனையை விரும்புகிறது !—உம், ஐயோ பாவம், குருடராய்ப் போனீரே !

**வசீகரன்**—ஐயோ ! குருடனாய்ப் போனேனே ! குருடனாய்ப் போனேனே !

**கணதேவன்**—ஐயா, ஐயா, அப்படி சொல்லாதீர். அப்படி சொல்லினால், குருடு அதிகமாய் விடும்.

**வசீகரன்**—பின் எப்படி சொல்கிறது ?

**கணதேவன்**—கண் பொட்டை ஆனேனே, என்று சொல்லும்.

**வசீகரன்**—கண் பொட்டை ஆனேனே ! ஐயோ! கண் பொட்டை ஆனேனே ! ஐயா, இதற்கு என்ன செய்யலாம், சொல்லுங்கள், ஐயா !

**கணதேவன்**—என்ன செய்வதா ? நான் சொல்கிறபடி செய்யும். உங்கள் குருடு நீங்கிவிடும் என்ன சொல்கிறீர் ?

**வசீகரன்**—சொல்லும் ஐயா, அப்படியே செய்கிறேன். கண் பொட்டை ஆச்சே !

கணதேவன்—அப்புறம்.

வசீகரன்—அப்புறம், சொல்லும் ஐயா.

கணதேவன்—வாரும் இப்படி-வந்தீரா? காதைக் கைகளால் பிடித்துக்கொண்டு, உட்கார்ந்து எழுந்திரும்.

வசீகரன்—ஏனையா, என்னைத் தோப்பணமா போடச் சொல்கிறீர்?

கணதேவன்—உம்மைத் தோப்பணம் போடச் சொல்வேனா? உட்கார்ந்து உட்கார்ந்து எழுந்திருக்கச் சொன்னேன்.

வசீகரன்—ஊம், நான் தோப்பணம் போடமாட்டேன்.

கணதேவன்—ஆனால், உங்கள் கண போய்விட்டது போம்.

வசீகரன்—இல்லை, இல்லை, ஐயா; சொல்லுங்கள் ஐயா!

கணதேவன்—போடும் தோப்பணம். உம்.

வசீகரன்—(தோப்பணம் போட்டு) ஐயாகால் நோகுதையா.

கணதேவன்—நொந்தாற்றான், கண்தெரியும். விடாதீர், போடும்.

வசீகரன்—(தோப்பணம் போட்டு) ஐயோ, எழுந்திருக்க முடியவில்லையே!

கணதேவன்—சரி, போதும் போம்.

வசீகரன்—ஐயா, நான் நன்றாக ஏதாவது மருந்து கொடுங்கள் ஐயா. கண் தெரியவில்லையே. முன்னிருந்ததைப் பார்க்கிலும் அதிகமாய் விட்டதையா!

கணதேவன்—மருந்தா வேண்டும்? நான் ஒரு பைத்தியன் பெயரைச் சொல்கிறேன். அவனிடத்தில் போனால், உங்கள் கண் நன்றாய் விடும்; போம்.

வசீகரன்—அப்படியா? அவனிடம் போனால் அவன் என்ன மருந்தையா கொடுப்பான்?

கணதேவன்—என்ன மருந்து கொடுக்கப்போகிறுன். வைத்திய சாஸ்திரத்தில் 'கண்ணது பொட்டையாகக் கருத்துடன் மருந்தைக் கேளாய், மண்ணினில் வளர்ந்தே ஓங்கும் கள்ளி மாமரத்தின் பாலே—

வசீகரன்—என் ஐயா, உம்மைக் கண் பொட்டையாகவா மருந்து கேட்டேன்?

கணதேவன்—பின் என்ன கேட்டீர்? அப்புறம்.

வசீகரன்—அப்புறம், மருந்து வேண்டாம். நீங்கள் வைத்தியர் பேரைச்சொல்லுங்கள்; நான் அவரிடம் போகிறேன்.

கணதேவன்—வைத்தியர் பெயரைச் சொன்னுல் போதுமா?

வசீகரன்—போதும் ஐயா.

கண்தேவன்—ஆனுல் சரி, இதுவே சரி. உம், அந்த வைத்தியர் தடபுடல் மாத்திரை எமலோக ஜாத்திரை, இராஜ கம்பீர டாம்பீர ஒய்யார டமார குமார கால் மாட்டு வைத்தியர் என்பார்கள்.

வசீகரன்—என்ன ஐயா, நீளமாய் இருக்கிறதே அவர் பெயர்?

கணதேவன்—ஆமாம் அந்த ஆள் சாமாளியம் ஆனவரா என்ன? தாங்களோ மஹாராஜாவின் பிள்ளை. தங்கள் மூஞ்சைப்பார்க்கும் போதே தெரியவில்லையா? அப்படி இருக்க உங்களைப்போன்றவர்களுக்கு வைத்தியம் செய்வோர் எப்படிப்பட்டவராக இருக்கவேண்டும்? உம், அப்புறம்.

வசீகரன்—அப்புறம்— ஆம் இருக்கும் ஐயா. ஐயோ மறந்து விட்டேன்; அவர் பெயரை! அவர் பெயர் என்ன?

கணதேவன்—அடடா, நானும் மறந்து பூட்டேனே! பூட்டேனே!

வசீகரன்—சொல்லும் ஐயா விளையாடாதீர் ஐயா.

கணதேவன்—சே, நான் என்ன குழந்தையா விளையாட? அப்படி மற்ருேர் முறை சொல்லாதீர் ஐயா.

வசீகரன்—கோபிக்காதிர் ஐயா. வைத்தியர் பெயரை மாத்திரம் சொல்லும் தயை செய்து.

கணதேவன்—கால்மாட்டு வைத்தியர், அவர் பெயர்.

வசீகரன்—கால்மாட்டு வைத்தியரா? அவரிடம் போனால், என் கண் நன்றாய் விடுமா?

கணதேவன்—அதற்கென்ன சந்தேகம்? உள்ளதும் போய் விடும்.

வசீகரன்—என்னஐயா அப்படி சொல்கிறீரே?

கணதேவன்—உள்ள நோயும் போய் விடும் ஐயா என்றால்.

வசீகரன்—அப்படியா?

[சித்திரபாஹு வருகிறான்.]

(அவனிடம் ஓடி) அண்ணாத்தே, கால்மாட்டு வைத்தியர் எங்கே இருக்கிறார்? என் கண் பொட்டையாய்ப் பூட்டுதே! பொட்டையாய்ப் பூட்டுதே! அண்ணாத்தே சொல்லுங்கள்.

சித்திரபாஹு—வசீகரா, விலகிநில் இப்படி--விதூஷகா, இவை எல்லாம் உன்னுடைய விளையாட்டோ?

வசீகரன்—உம், நான் குருடனாய்—உங் பொட்டையாய்ப் போனேன். விலோசனா என்மேலே—

சித்திரபாஹு—ஆ ஹா! அடே வசீகரா. நீ இவ்விடத்தை விட்டுப் போகிறாயா, அல்லது—

[வசீகரன் ஓடிப் போகிறான்.]

கணதேவா, இவை எல்லாம் என்ன விளையாட்டு?

கணதேவன்—நான் ஒன்றும் செய்யவில்லை அரசே. அஃதிருக்கட்டும், என்ன தாங்கள் போன இடத்தில் உங்கள் எண்ணம் நிறைவேறாமற் போய்விட்டதே!

சித்திரபாஹு—என்ன செய்வது, கணதேவா!

கணதேவன்—ஏன், போம்போது சகுணம் நன்ருய் இராமல் இருக்கும் என்று எனக்குப் படுகிறது. ஏன் அரசே, தமக்கெப்படி தோற்றுகிறது ?

சித்திரபாஹு—அப்படிதான் இருக்கவேண்டும். இல்லாவிடின் என் வீரத்திற்கு.—

கணதேவன்—அடடா ! உங்கள் வீரத்தைச் சொல்லவும் வேண்மா ? கற்பூரம் தானே ?

சித்திரபாஹு—அடே விதூஷகா, என்னையுமோ ஏளனம்செய்கிருய் ?

கணதேவன்—இல்லைஇல்லை. அரசே உம்மை ஏளனம் செய்வேனே நான் ? உங்கள் வீரம் கல்லைப் போன்ற பூரம் என்றேன். பூரம் எவ்வளவு கொடியது ! அதிலும் கல்பூரம்—கல் என்ருல் மலை. ஆதலால், மலையைப் போன்ற பூரம் என்றேன். அதாவது, கோரம் என்று சொல்வதற்குப் பதிலாக.

சித்திரபாஹு—ஆ! என்ன சொல்லினை ? போ, என்முன் நில்லாதே(பிடித்துத்தள்ள கணதேவன்போகிருன்)—சீ, என்னுயிர் போவதாயினும், அவ்விலோசனையை எப்படியாவது பெருமல் விடேன். அவள் விஜயனை மணந்துகொண்டதால் மூழ்கி விட்டதென்ன ? பார்க்கிறேன் ஒருகை. உம், என்னுல் ஆகாதகாரியமும் உண்டோ?—ஆம், இப்போது என்ன செய்யவேண்டும் ?—அந்தோ ! என்னுல் ஆனவரையிலும் அந்தவிஜயனை ஒழிக்க எவ்வளவோ பிரயத்தனப்பட்டேன். ஒன்ருலும் முடியவில்லையே ! ஒரு துணையும் இன்றி, இவ்விடத்தில் எங்களில் ஒருவனுய் வாழ்ந்துவரும் அந்த அற்பனுக்கு, இவ்வளவு வல்லமைஎங்கிருந்து வந்ததோ தெரியவில்லையே! என்ன இருப்பினும், எங்கள் தந்தை எங்களைப் பிள்ளைகள் என்றும் பாராமல், அந்த விஜயன்மீதே அதிகவிஸ்வாசம்பாராட்டுகின்ருரே. ஆஹா! அவன் எவ்வெவ் விஷயங்களில் எங்களுக்கு இடையூருக வந்து நேரிட்டிருக்கிருன் ! இவ்விராஜ்ஜிய முழுதும்

வேண்டுமானால், அவனுக்கே போகட்டும்— என்,போகாமல் இருக்கப்போகிறதா? தந்தையார் தான், என்னவோ தம்பியின் மகன் தம்பியின் மகன் என்று அவனிடத்தில் அதிக பக்ஷம் வைத்திருக்கிறார். அன்றியும், அவனைவிடப் புத்தியிலும், புகழியிலும், வீரத்திலும், தீரத்திலும் மிக்கவன் ஒருவனும் இல்லை என்றும் சொல்லிக் கொள்கிறார். அப்படியிருக்க, என் இவ்விராஜ்ஜியத்தைஅவர் அவனுக்குக் கொடாமற் போவர்? கொடுப்பார், கொடுத்தே தீர்வர். ஆக்ஷேபனையே இல்லை அதற்கு. அது போனாற் போகட்டும். அன்று அப்பாவி, சோழன் மகளின் சுயம் வரத்திற்கு வராமல் இருக்கப்படாதா! அங்கும் வந்து விட்டனனே. பாவி,என் சுகத்தைக் கெடுக்க! அடே விஜயா, உன்னைநான் இவ்வுலகில் உயிருடன் விட்டிருப்பதால் அன்றோ என் சுகத்திற்கே பெருந்தடையானாய்? ஐயோ! எவராலும் அன்று எடுத்தற்கும் அருமையான வில்லை நான் எடுத்தும் வளைத்தேனே. அது ஏதோ என் கெட்ட காலத்திற்கு அடையாளமாக மேல் உதைந்தது. இல்லாவிடின், நானே அன்றோ அப்பொற்றொடியை மணந்திருப்பேன்? மணந்தேன் என்று திடமாய் நான் அப்போது எண்ணியிருந்த அப்பெண்ணை, இவன் மனைவியாக்கிக் கொண்டதைக் கண்டபோது என் மனம் எவ்வாறு சகிக்கும்! ஆ! அவன் அவளுடன் உல்லாசமாய்ச் சோலையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பதைக் காணும் போதெல்லாம், எனக்கு உண்டாகும் மனக்கொதிப்பை யார் அறிவார்! அந்தோ! அவன் அன்று சேரனோடுபொருத வாட்போரில் மாண்டிருக்கப்படாதா! அது போகட்டும். நான் இத்தனை நாள் செய்து வந்த முயற்சிகள் ஒரு பயனும் அடையாதபடியும் செய்துவிட்டனனே!—ஆம், அவனினும் சமர்த்தர் இவ்வுலகில் இல்லை என்றேசொல்ல வேண்டும். அன்றியும், போதாக் குறைக்கு, அப்படுபாவி சுகுமாரனும் அவனுக்குத் துணையாக இருக்கிறான். அவனாலேயே அனேகமாய் என்முயற்சிகள் எல்லாம் வீணாய்ப் போகின்றன. நானும் அவனைப் பிரிக்க எவ்வளவோ வழிகளைத் தேடியும், அவன் பிரிந்த விதத்தைக் காணோமே—

உம்,இவற்றை எல்லாம் எண்ணி, இப்போதாவதென்ன?—பேசாமல் விட்டுவிடட்டுமா? விஜயன் எப்படியிருப்பினும் என் தம்பி அன்றோ? சீ என்ன மடையன் நான். அவனையா உயருடன் விட்டுச் சுகமாய்வாழ, நான் பார்த்திருப்பது? அப்படி நான் விட்டு விட்டால், இதுவரையில் நான் செய்த வேலைகளுக்கும், ஓர் அறிவீனன் செய்யும் வேலைகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?— பாவம்! அவன் தான் என்னை என்ன செய்தான்! அவனை ஏனோ நான் வீணாக வருத்தவேண்டும்! அவன் மனமார எனக்கொரு கெடுதியையும் செய்யவில்லையே! தன் வன்மையால் அப்பெண்ணை மணந்தான். ஆ—அது ஒன்று போதாதோ? நான் இஷ்டப்பட்ட மங்கையைத் தான் மணந்து அவளுடன் உல்லாசமாய் இருக்கிறானே. அதைவிட, அவன் வேறுதீமை எனக்கென்ன செய்யவேண்டும்? விஜயா, விடேன் உன்னை. உன் உயிரைக் காத்துக்கொள்ளும் வழியை இனி நாடு—விலோசனா, ஒரு முறையாவது நான் உன் கனிவாய் முத்தம் பெற்றே, உயிர் விடுவேன். இது சத்தியம் (போகிறான்)

---

# இரண்டாமங்கம் - முதற்களம்.

களம்: காஞ்சி அரண்மனையில் ஓர் மறைவிடம்—காலம்: இரவு.

[எல்லோரும், குடி மயக்கத்தால் தள்ளாடிக்கொண்டிருக்கின்றனர். சித்திரபாஹு இன்னும் அங்குள்ளவர்களுக்கு மதுவைத்தரும்படி வேலையாட்களுக்கு உத்தர விடுகிறான்.]

சித்திரபாஹு—அடே, ஏனடா அங்குத் தடியன் போல பேசாது நிற்கிறாய்? இதோ இங்கிவருக்குச் சிறிது மது கொண்டுவா.

பாலசூர்யன்—வேண்டாம் சித்திரபாஹு. எனக்குஅதிகமாய் விட்டது.

கணதேவன்—ஐயா, வேண்டாதவரைத் தொந்தரவு செய்வானேன்? ஏனையா, அப்புறம்! தாம் சாப்பிடுகிறது தானே?

வசீகரன்—அதைத்தான் தங்களைக்கேட்கலாம் என்று இருந்தேன் அப்புறம்.

கணதேவன்—அதைத்தான் நானும் கேட்டேன்.

சித்திரபாஹு—கணதேவா, உன்னை யாரிங்கு வரச்சொன்னது?

கணதேவன்—இளவரசரா கேட்பது?

சித்திரபாஹு—ஏளனம் செய்கிறாயா என்ன?

கணதேவன்—அரசே, என்னை அப்படி எண்ணவேண்டாம். உம்மை அப்படி ஏளனம் செய்பவன் ஒரு புத்திசாலி—இல்லை, புத்தியில் ஆதவன் அன்றோ? அரசே, உன்னை யார் உள்ளேவரச்சொன்னது என்றீரே, தாங்கள் வரச் சொல்லியதை மறந்து விட்டீரா என்ன?

பாலசூர்யன்—ஆ, ஐயா, நீர் நீர் நீர்—

கணதேவன்—சரி, இதுவே சரி.

சித்திரபாஹு—என்ன சொல்லினை விதூஷகா?

கணதேவன்—இல்லை, இதுவே சரி என்றேன். அரசே, இவர் என்ன இப்படி உறக்கம் கொண்டாரே?—என் ஐயா, அப்புறம், உங்களுக்கும்—

சித்திரபாஹு—விதூஷகா, அப்புறம் எனக்குக் கோபம் வரும்.

கணதேவன்—ஐயையோ, அதை ஏன் இங்கு அழைக்கிறீர்? அதைப்போகச்சொல்லும் வந்த வழியே.

சித்திரபாஹு—பாலசூர்யா, ஏன் இன்னும் சிறிது சாப்பிடுகிறாயா?

பாலசூர்யன்—போதும் ஐயா, என்னைத்தொந்தரவு செய்ய வேண்டாம். என்னை இப்போது அழைத்த காரணம் என்ன?

சித்திரபாஹு—அதைச்சொல்கிறேன் அப்புறம். உங்கள் ஊரில் இருப்பவர்கள் எல்லாம் மதுபானத்தில் அதிக பிரியம் உடையவர்கள் என்று கேள்விப்பட்டேன். அதுஉண்மை தானா?

பாலசூர்யன்—என்ன இது ! இது கூடவா ஒரு கேள்வி? உங்கள் ஊரில் இருக்கப்பட்டவர்கள் குடிப்பதே கிடையாதா? அஃதிருக்கட்டும் என்னை அழைத்த விஷயம் என்ன ?

சித்திரபாஹு—இதற்குள் அதற்கென்ன அவசரம் ?

கணதேவன்—பாவம், அவருக்குத் தெரியாது. ஏனையா, அப்புறம்! தாங்கள் பழமொழியையெல்லாம் மனப்பாடம் செய்திருக்கிறீரே, எது கடலினும் பெரிது?

வசீகரன்—கடலினும் பெரிது—குளம்.

கணதேவன்—சரிதான், குளத்தினும் பெரிது?

வசீகரன்—கிணறு, இது தெரியாதா ஐயா ?

கணதேவன்—சரி, சரி, இப்போது தெரிந்து கொண்டேன். ஐயா சேரநாட்டதிபதியே, தாம் எது கடலினும் பெரிது என்கிறீர் ?

சித்திரபாஹு—கணதேவா, உனக்கொன்றும் வேலை இல்லையா என்ன ?

கணதேவன்—அரசே, உங்களுக்காகவே நான் இப்போது இக்கேள்வியைப்போட்டேன். தாங்கள் கோபித்துக் கொள்கிறீரே. இது தான், இந்தக்காலமே இப்போது தூக்கத்தில் கண் தெரிகிறதே இல்லை.

வசீகரன்—என் ஐயா தெரிகிறதில்லை அப்புறம்.

கணதேவன்—ஓ, தாங்களோ! தங்களுக்குத் தெரியும்.

பாலசூர்யன்—சரி, நான் போகவேண்டும். சித்திரபாஹு, என்னை ஏன் அழைத்தாய் ?

கணதேவன்—நான் கேட்டதற்குத் தாங்கள் பதில் சொல்லவில்லையே.

பாலசூர்யன்—என்ன, பழமொழியா கேட்கிறாய் ?

கணதேவன்—ஆமாம், காய்மொழி, பிஞ்சு மொழி, பூமொழி, மொக்கு மொழி, அரும்பு மொழி, இவை வேண்டாம். பழமொழி தான் கேட்டேன்.

பாலசூர்யன்—ஏது, உனக்கு வாய் அதிக நிகளமாய் விட்டது?

கணதேவன்—அ எ! அப்படிசொல்லாதீர். தெரிந்தால் சரியாய்ச் சொல்லுங்கள். எனக்கா வாய் நிகளம்? அப்படி இருந்தால் என்னைக் கோணவாயன் என்று சொல்லமாட்டார்களா எல்லாரும்? தங்களுக்கு அப்படி சந்தேகம் இருந்தால், அளந்து பாருங்கள் என் வாயை. என்ன ஐயா சொல்கிறீர், அப்புறம்?

வசீகரன்—அப்புறம்?

சித்திரபாஹு—சரி, விதூஷகா, நிறுத்து உன் விகடத்தை.

கணதேவன்—ஒரு வார்த்தை இடையில். மன்னிக்கவேண்டும் அரசே—ஐயா, அந்தப்பழமொழி என்ன சொல்லுங்கள்.

பாலசூர்யன்—என்ன பழமொழி? பொறுமை கடலினும் பெரிது. இதுதானே?—சித்திரபாஹு, நான் போகவேண்டும். ஏன் என்னை அழைத்தாய்?

கணதேவன்—ஐயா, தங்களைத் தான். சற்றுமுன்பாகச் சொன்னீரே 'பொறுமை கடலினும் பெரிது' என்று. பொறுங்கள், அவசரப்படாதீர்.

பாலசூர்யன்—நான் போகவேண்டும் சித்திரபாஹு.

கணதேவன்—பொறுமை கடலினும் பெரிது-என் ஐயா, அப்புறம்?

வசீகரன்—அப்புறம்—

பாலசூர்யன்—போகவேண்டும் நான்—

கணதேவன்—பொறுமை கடலினும் பெரிது.—தாங்கள் சொல்லியது தானே? இதற்குள் மறந்து விட்டீரா?

பாலசூர்யன்—என்ன சொல்லப்போகிறாய், சித்திரபாஹு?—நான் போகவேண்டாமா, ஊருக்கு.

சித்திரபாஹு—யார் போகவேண்டாம் என்றது? இதோ கடைசிமுறை இதை உட்கொள். இதோ நானும் உனக்காக உட்கொள்ளுகிறேன்.—விதூஷகா, வசீகரா, நீங்கள் எல்லோரும் வெளியே போயிருங்கள். (எல்லோரும் வெளியிற்செல்ல) உம், சாப்பிடு.

பாலசூர்யன்—எனக்கு அதிகமாய் விட்டதென்றால், கேட்க மாட்டேன் என்கிறாய்.

சித்திரபாஹு—இல்லை, சிறிதுதான் இருக்கிறது. நானும் உன்னுடன் சாப்பிடவேண்டும் என்று பிரியப்பட்டேன். இருவரும்ஓர்நாளைக்கு இப்படி இருக்கவேண்டும் என்ற எண்ணத்தாலேயே,உன்னைவரச்சொன்னேன்.இதோ,சாப்பிடு.

பாலசூர்யன்—(வாங்கிப்பருகி) என்ன இவ்வளவு நெடியாக இருக்கிறது!

சித்திரபாஹு—(தானும் சாப்பிடுவதைப்போல்) ஒன்றும் எனக்குக்காணோமே. இது:ஒரு நெடியா? பழகிய நீயே இப்படி சொல்லினால், நான் என்ன என்று எல்லாம் சொல்லவேண்டும்?

பாலசூர்யன்—சி—த்—திர-—பா—ஏ, நல்ல்லா—

சித்திரபாஹு—பாலசூர்யா, இது உண்மையா?

பாலசூர்யன்—எத்து?

சித்திரபாஹு—வேண்டும் என்றே ஆடுகிறாயா என்ன?

பாலசூர்யன்—இல் இல்லேல் ஏ ஏ.

சித்திரபாஹு—பாலசூர்யா, என்னையே ஏமாற்றப் பார்க்கிறாயே.

பாலசூர்யன்—ஏ ஏ; நீ இ இ் இன்ரூ ஒஸ்தியா?

சித்திரபாஹு—(ஒரு புறமாய்) பேஷ்! நாம் எண்ணியபடி முடிந்துவிட்டது. இந்த மது என்ன என்னவேலை செய்கிறது! கொஞ்சம் நேரத்துக்குமுன்எவ்வளவோ நியாயங்களை எல்லாம் எடுத்துக் கூறியவன், இப்போது இதனை உட்கொண்டதால் எக்கதியாய் விட்டான் பார்! இந்த அற்ப மதுவிற்கும் அத்தனை மகிமை இருக்கிறது!

பாலசூர்யன்—ஆ எ, சித்—திர—பா—எங்கே போய் விட்டாய்?

சித்திரபாஹு—எங்கும் போக இல்லையே. இதோ இருக்கிறேன் நான்—சரி, இனித்தா மதியாது, இக்குடிதத்தில்

அவனைக் கை யெழுத்திடச் செய்கிறேன்—பாலசூர்யா, நீ இங்கிலீஷ்மையில் உன் பெயரை எழுத முடியுமா?

பாலசூர்யன்—ஏன்—முடி—யாதா.

சித்திரபாஹு—நான் நினைக்கவில்லை.

பாலசூர்யன்—ஆனால்,—ஒரு- ஏ—டும்—கொண்டுவா.

சித்திரபாஹு—(தேடுபவன் போல இருந்து) இதோ, இதில் எழுது பார்ப்போம்.

பாலசூர்யன்—(கை யெழுத்திடுகிறான்) உம், என்ன—.

சித்திரபாஹு—சரிதான்—(ஒருபுறமாய்) முடிந்து விட்டது. இதில் கையெழுத்திட்டதே போதும்-இதைக்கொண்டே என் காரியத்தை முடித்துக்கொள்கிறேன். இதில், இவன் என் தந்தையைப் போருக்கழைப்பதாய் எழுதியிருக்கிறேன். இதனை யானே, என் தந்தையிடம் தந்தால், உடனே அவர் விஜயனைச் சண்டைக் கனுப்புவார். அவ்விடம் அவன் போனால், பாலசூர்யன் தன் வன்சினத்தை எல்லாம் தீர்த்துக்கொள்வான். ஆம். பிறகு விலோசனையைச் சுகமாய் அடையலாம்—பாலசூர்யா, நேரமாகிறதே.

பாலசூர்யன்—ஆம்,—போ ஒ ஒ வோ ஓம்.

சித்திரபாஹு—பாலசூர்யா, நான் ஒன்று சொல்ல மறந்தேன். விஜயன், உன்மீது படையெடுத்து வருகிறதாய் இருக்கிறான்.

பாலசூர்யன்—(மயக்கத்திற் தெளிந்து) என்ன என்ன!

சித்திரபாஹு—உன்மீது விஜயன் படையெடுத்து வரப்போகிறானாம், சாக்கிரதை. எப்படியாவது அவனை அடக்கும் வழியைப் பார்.

பாலசூர்யன்—அப்படியா?—அவன்என் நல்லகாலத்திற் கடையாளமாக என்நாட்டில் வந்து விடவேண்டும். அப்போது அவன் படப்போகும் கதியை நீயே கேட்கப் போகிறாய் பார்.

சித்திரபாஹு—என்னவோ நான் சொல்லிவிட்டேன்.

பாலசூரியன்—ஆம், நீ சொல்லியது மிகவும் நல்லதே. இல்லாவிட்டால், நான் எப்படி முன்சாக்கிரதையாய் இருக்க முடியும்?

சித்திரபாஹு—சரி, நேரமாய் விட்டது, வா.

[இருவரும் போகின்றனர்.]

---

## இரண்டாமங்கம் - இரண்டாங்காட்சி.

**களம்: காஞ்சி அரண்மனையில் ஓர் அறை—காலம்: காலை.**

கணதேவன்—இந்த சித்திரபாஹு ஏதேதோ உபாயங்களை எல்லாம் செய்கிறான்! அன்று பாலசூர்யனிடம் வஞ்சகமாகவும்கையெழுத்துப்பெற்றுக்கொண்டான். ஆஹா! இதன் உண்மையை அங்கு ஒளித்திருந்த நானும் அக்கடவுளும் தான் அறிவோம். பாவம்! மஹாராஜாவுக்கு இவ்வுண்மை எப்படி விளங்கப்போகிறது! ஒருபாபமும் அறியாதவிஜயரை இப்படி எல்லாம் செய்ய, நான் பேசாது பார்த்திருக்கவேண்டியிருக்கிறது. இவ்விஷயங்களை விஜயரிடம் சொல்லலாம் என்றால், அவரைச் சந்திப்பதற்கே முடியவில்லை. எங்கே எந்நேரம் பார்த்தாலும் வெட்டுதலும் குத்துதலுமே அவர்வேலையாய் இருக்கிறது! எப்படி சந்தித்துச் சொல்வதுநான்? அவர் அருகிற் செல்லவே எனக்கு பயமாக இருக்கிறதே. ஒரு வேளை நான் சொன்னால் அதைப் பொய்என்று அவர்கொண்டால் என்னசெய்வதென்று ஒரு பக்கம் பயமும் தோன்றுகிறது---ஆம், நான் ஏன் இதைச் சொல்லிக் கஷ்டத்திற்காளாகவேண்டும்? மேலும், விஜயரோ தனியானவர். என்ன இருந்தாலும், மஹாராஜாவிற்குப் பிள்ளைகள் என்ற பக்ஷம் இல்லாமற் போய்விடுமா? கடைசியில் நான் ஏன் விரோதப்படவேண்டும்? ஆயினும் அப்பாபிகள் உடன்பிறந்தானின் தாரமாயிற்றே என்று கொஞ்சமேனும எண்ண வில்லையே!

[வசீகரன் வருகிறான்.]

இதோ இத்தத்திக்குமோ இந்த எண்ணம்.---வாரும், வாரும், அப்புறம் !

வச்கரன்—அப்புறம்—ஆம், நான் இப்போது எப்படி இருக்கிறேன் உங்கள் கண்ணிற்கு? நன்ருய் இருக்கிறேனு? ஆம், நான் ஒரு கலியாண மாப்பிள்ளையைப்போல இருக்கிறேன் அல்ல ?

கணதேவன்—ஐயா, இதுவா கலியாணகோலம் ? ஐயையோ ! இது கலியாண கோலமாகாதே.

வச்கரன்—ஆ ! அப்படியா ? ஆனுல், அப்புறம் கலியாண கோலம் எது ஐயா ? சொல்லும், அப்படியே செய்துகொள்கிறேன்.

கணதேவன்—அதற்கு அதிக செலவு பிடிக்குமே. அல்லாமலும், நான் அதைக் காட்டுவதானுல், தாங்கள் பார்க்கும் வரையில் பேசாது, இருக்கவேண்டும்.

வச்கரன்—அப்படியே செய்கிறேன் ஐயா.

கணதேவன்—சரி, இப்படி வாரும் (அருகில் வர) காலை நன்ருய் நீட்டும். அகலப்படுத்தும். ஆயிற்ரு ? கையிரண்டையும் பக்கத்தில் உயர்த்தும். இப்போது ஒரு காலைத் தூக்கும். தூக்கினீரா ? மற்ெருரு காலைத் தூக்கும். (விழுகிருன்)ஐயையோ ! என்ன ஐயா, விழுந்துவிட்டீரே ?

வச்கரன்—ஐயா, எனக்குக் கலியாண கோலமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்.

கணதேவன்—வேண்டாமா ? ஆனுல் உமதிஷ்டம் அப்புறம்.

வச்கரன்—அப்புறம் ஐயா, நான் விலோசனுவைப் போய்க் கேட்கப்போகிறேன். அப்புறம் நான் என்ன விஜயனைப் போல இல்லையா ? அப்புறம், பாரும் எனக்கும் கையிருக்கிறது, காலிருக்கிறது.

கணதேவன்—எங்கே ஐயா உமக்குக் காலேஇல்லையே. பாரும் வேண்டுமானுல் உங்கள் கண்ணுல்.

வசீகரன்—ஆ ! இல்லையா !

கணதேவன்—நீரே பாரும்.

வசீகரன்—எங்கேபோய் விட்டது !

கணதேவன்—அதையாராவது தூக்கிக்கொண்டுபோயிருப்பார்கள். ஐயோபாவம் ! நொண்டிகப்தான் ஆனீரே !

வசீகரன்—அப்போது, என்னை விலோசனை பார்க்கவே மாட்டாளா ?

கணதேவன்—எப்படி பார்ப்பார் ? உம்மால் சரியாக நடக்கவே முடியவில்லையே. நொண்டிகப்தான் ஆய்விட்டீர்.

வசீகரன்—ஐயோ! ஆம் ஐயா, நடக்க முடியவில்லை. நொண்டிகப்தான், நொண்டிகப்தான் ஆனேனே !

கணதேவன்—என்ன செய்வது ! அழாதீர்.

வசீகரன்—நான் எப்படி விலோசனையிடம் போவேன் ?

கணதேவன்—எப்படிபோவீரோ; என்னைக் கேட்டால் ?

வசீகரன்—ஐயா, சொல்லும் ஐயா.

கணதேவன்—அதற்குக் கிஷாயம் போட்டுச் சாப்பிட வேண்டும். சூரணம் செய்யவேண்டும்---அப்புறம்.

வசீகரன்—அப்புறம்—என்ன கிஷாயம் என்னசூரணம் ஐயா?

கணதேவன்—கட்டியாறை •சூரணம், மண்வெட்டி • கிஷாயம்• இவை இரண்டும் போதும்.

வசீகரன்—அஅ ! எங்கே அகப்படும் ஐயா அவை ?

கணதேவன்—எங்கே அகப்படுமா ? அப்புறம் ?

வசீகரன்—அப்புறம் சொல்லும்ஐயா.

கணதேவன்—நமது ஊரில் பிணந்தூக்கி பெரியண்ண வைத்தியர் என்றிருக்கிறார். அவரிடம் போம்---அதோ உங்கள் அண்ணாத்தை (போகிறான்)

[சித்திரபாஹு வருகிறான்]

வசீகரன்—அண்ணாத்தே, பிணந்தூக்கி பெரியண்ண வைத்தியர் எங்கிருக்கிறார் சொல்லுங்கள்,

சித்திரபாஹு—என்ன! யார் உனக்கு இப்பெயரை எல்லாம் சொல்லிக் கொடுப்பது?

வச்கரன்—சொல்லுங்கள், நான் நொண்டிகப்தான், நொண்டி கப்தான், வைத்தியரிடம் போகவேண்டும்.

சித்திரபாஹு—வசீகரா, உன்னையார் நொண்டி என்றது?

வச்கரன்—சொல்லவேண்டுமா? எனக்குத்தான் கால் இல்லையே. ஐயோ கால்போச்சே! கால்போச்சே! (அழுகிறான்)

சித்திரபாஹு—(ஒருபுறமாய்)உம்! இவனைப் பார்க்கும் போதே வெட்டிவிடலாமா என்று இருக்கிறது. இது என் தம்பி எனப் பிறக்கவேண்டுமா---வசீகரா,நீ இப்படி எல்லாம் செய்தால் உன்னை விலோசன திரும்பியும் பாராள்.

வச்கரன்—இல்லை இல்லை---கால் போச்சே!

சித்திரபாஹு—ஒன்றும் போகவில்லை. நீ பேசாமல் வா. ஒவ்வொருக்ஷணமும் உன் வாயால் உண்மை எங்கே வெளிப் பட்டுப் போகிறதோஎன்று பயப்படவேண்டியதாயிற்று: வா---இதோ மந்திரிவருகிறார். என்னவிசேஷமோ தெரியவில்லை.

[மந்திரி வருகிறார்]

வாரும், மந்திரியாரே! என்ன விசேஷம்? போருக்கு யாரை அனுப்புவதாய் உத்தேசித்திருக்கிறார் பிதா?

மந்திரி—உமக்கொரு கஷ்டமும் இல்லை, இளவரசே. விஜயரையே போம்படி உத்தரவிட்டிருக்கிறார் மஹாராஜா.

சித்திரபாஹு—அப்படியா? ஆம், விஜயன் போனால்தான், அவனை வென்று வருவான். மந்திரியாரே, அந்தப் பால சூர்யனுக்கு என்ன தைர்யம் பார்த்தீரா?

மந்திரி—எல்லாம் பிறகு தெரிகிறது. நான் வருகிறேன்.

சித்திரபாஹு—அப்படியே செய்யுங்கள்---இப்போது விஜயன் தன் மாளிகையிற்றான் இருக்கிறானே?

மந்திரி—ஆம், அவ்விடத்திற்குத் தான் ஆட்கள் போயிருக்கின்றனர்.

சித்திரபாஹு—மிகவும் அவசரமாய்ப் புறப்பட வேண்டும் என்று எழுதினரோ?

மந்திரி—தாமதிக்காமல் புறப்படும்படி எழுதி இருக்கிறர்.

சித்திரபாஹு—சரிதான், போய்வாருங்கள்—வசீகரா, வா போவோம்.

[மந்திரி ஓர் புறமாயும் மற்றிருவரும் மற்றோர் புறமாயும் போகிறர்கள்.]

---

## இரண்டாமங்கம் - மூன்றுங்காட்சி.

களம்: காஞ்சியில் உபவனம்—காலம்: மாலை.

[விலோசனை கையில் புஷ்பக் கூடையேந்தி, மோஹனை யுடன் பாடிக்கொண்டு வருகிறள்.]

ஜவோஜிஜாவ்] [ஆதிதாளம்.

பல்லவி.

ஆ ஹா யிதென்ன மனோஹரமாய் அமைந்துளதே
இதற்கிணையான தெந்தவுலகுண்டோ.

சரணம்.

ஆச்சர்யமாக இன்று மாரனுடகாவே போல
பூச்செறிந்த வனப்பிதைப் புகலும்தரத்தினதோ- ஆஹா
நல்வாசனை வீசும் தேசுறுமுல்லை நந்தியா வட்டை சண்பகமும்
பல்லோர்புகழும் சீர் மல்லிகையும் நன்றாய் மலர்ந்த நந்தன
வனமே. (ஆச்)

விலோசனை—மோஹனா, இந்த நந்தவனத்தைப் போல அழகுடைய ஓர் நந்தவனம் வேறு எங்கேனும் உண்டோ? அடி இதன் அழகு நம்முடைய காவிரிப்பூம் பட்டிணத்து நந்த வனத்திற்கும் வராது. பார்அதோ தெளிந்த நீரோடை! அது அழகிய வெள்ளைக் கற்களின்மீது படிந்தோடுவதைப் பார்க்க மனோரம்மியமாக இல்லையா நமக்கு? ஆ ஹா! எத்தனை விதமான புஷ்பச் செடிகள்! என்ன என்ன நிறமான புஷ்பங்கள்! ஒவ்வொன்றும் மற்றென்

ரைத் தன்நறுமணத்தால் தோற்கடிக்கிறது பார்த்தாயா! அதோபார் அம்மல்லிகைக் கொடியை! அது என்ன அழகாய் அக்கொழுக்கொம்பைச் சுற்றிக்கொண்டிருக்கிறது, ஒரு அழகிய மங்கை தன் காதலனைக் களிப்புடன் கட்டித் தழுவிக்கொண்டு இருப்பது போல அன்றோ இருக்கிறது! என்ன சுகந்தம்! என்ன அழகு! ஆ! அக்குயிலோசையைக் கேட்டாயா?

விருத்தம்.

பாரடி உற்று நோக்கிப் பைங்குயி லினங்களெல்லாம்
சீருடனென்று கூடிச் சிறப்புறக் கூவுமோசை
வீரவிஜயரிங்கில்லை விலோசனை தனியாய் உள்ளாள்
மாரவுன் வலிமை காட்டவா வெனன் மாணுமன்றே.

மோஹனா, நாம் இவ்விடத்தில் இருக்கிறோமே என்று சிறிதும் அஞ்சாமல், பக்ஷிஜாலங்கள் எல்லாம், சமீபத்திலேயே குதித்துச் செல்கின்றனவே! ஆஹா!

விருத்தம்.

கற்பகச் சோலை யென்கோ காமனார் ஆடல் செய்யும்
போற்புறும் சாலை யென்கோ புனிதராம் நாக ரானோர்
அற்புடன் வாழுகின்ற அவ்வுலகென்கோ என்றன்
விற்பன மிக்க தோழி விளம்புவாயீதை நீயே.

மோஹனா—இன்னும் எவ்வளவு தான் அம்மா வர்ணிக்கப் போகிறீர்? இதற்கு முன், நமது ஊர் நந்தவனத்தைப் புகழ்ந்தீர்.

விலோசனை—ஆம், உண்மையே. என்றாலும், அது இப்பொழிலுக்கு இணையாகுமா?

மோஹனா—ஆகுமா! எல்லாவற்றிற்கும் பிரதானமான ஒன்று இங்கு இருக்கும் போது, அது எப்படி உயர்வாகப் போகிறது?

விலோசனை—மோஹனா, பரிகாசம் செய்கிறாயா என்ன என்னை? நீயே தான் சொல் பார்ப்போம். இவ்வளவு அடர்ந்து இருண்டுள்ள சோலை, இவ்வுலகில் எங்கடி இருக்கிறது?

மோஹனு—முதலில் உமது மனத்தில் இருந்தால் அல்லவோ, பிறகு இவ்வுலகில் இருக்கப்போகிறது!

விலோசனை—இதுதானே? அஃதிருக்கட்டும்: என்னடி, இன்னும் என் பிராணநாதர் வரக்காணுேமே!

மோஹனு—இதற்குள் அவசரமா அம்மா?

விலோசனை—போடி, உனக்கென்ன தெரியும்? அவர் எப்போதும் இப்படியே செய்கிறுர்—மோஹனு, ஒரு வேளை நான் மாளிகையில் இருப்பேன் என்று எண்ணி அங்குச் சென்றுரோ?

மோஹனு—சென்றுல்என்ன? போய்ப் பார்க்கட்டுமே. அங்கு இல்லாதது கண்டு, இவ்விடம் வரப்போகிறுர்.

விலோசனை—ஆனுல், அவர் வரும் வரையில் நாம் ஏதாவது விளையாடலாமா?

மோஹனு—என்ன ஆட்டம் ஆடப்போகிறீர் அம்மா? இன்னும் சிறிது நேரம் பொறுத்தால் உம்முடன் நன்றுய் ஆடப்போகிறவர் வரப்போகிறுர்.

விலோசனை—சீ போ. இதுதானே உன்னிடம்? வா, நாம் ஊஞ்சல் ஆடலாம்.

மோஹனு—அப்படியே செய்யுங்கள்.

விலோசனை—(ஊஞ்சலில் உட்கார்ந்து)மோஹனு, நீ ஏதாவது ஒரு பாட்டுப் பாடு, கேட்போம்.

மோஹனு—எனக்கென்ன பாட்டம்மா, தெரியும்? இதற்காவது, முன்னமே கற்றுக் கொடுத்திருந்தால்?

விலோசனை—சீ! இவ்வளவு தானு நீ?

மோஹனு—என்னவோ நான் வந்த வழி.

[விஜயன் வருகிறுன்.]

விலோசனை—மோஹனு, அதோ பார்த்தனையா அத்தாமரையினை?

[விஜயன் மோஹனுவின் கரத்துள்ள கைக்குட்டையைப் பெற்று விலோசனைக்கு விசிறி நிற்கிறுன். மோஹனு போகிறுள்.]

அது ஏனடி அப்படி குவிந்து போயிற்றே?

**விஜயன்**—(மோஹனனுவின் குரலொலிபோல்) ஆமாம், காதலரைக் கண்டபோது தானே மங்கையர் முகம் மலர்வது?

விலோசனை—அடி, அந்த அற்பத்தாமரைக்கும் அத்தனை அறிவிருக்கிறதே! ஆஹா! அதற்கிருக்கும் குணமும் என்னிடத்திலில்லை. உம்,என் பிராணநாதர் இன்னும் வராமல் இருந்தும், (திரும்பிப் பார்த்து எழுந்து) பிராணநாதா---தோழியென்னை மோசம் செய்தா போயினள்?--ஆகட்டும், அவளை நான் என்ன செய்கிறேன் பாரும்.

விஜயன்—பாவம், நீ என்ன செய்யப்போகிறாய் அவளை! நான் அன்றோ அவளை இப்படி செய்யச் சொல்லினேன்?

விலோசனை—தாம் சொன்னால், அவள் செய்வதோ?

விஜயன்—ஏதோ செய்து விட்டாள். இப்போதென்ன; அவளுக்கு இடப்போகும் தண்டனையை எல்லாம் எனக்கு விதித்துவிடு. நானே உண்மையில் இக்குற்றத்தைச் செய்தவன்.

விலோசனை—போம் பிராணநாதா. இவை எல்லாம் ஒருவிளையாட்டா?—தாமா பிராணநாதா இவ்வளவுநேரம் விசிறி இருந்தீர்?

விஜயன்—ஆம், அதற்கென்ன?

விலோசனை—தாம் எனக்கு விசிறலாமா?

விஜயன்—விசிறப்படாதா? தப்புதான். உம், இதற்கென்ன தண்டனை விதிக்கப்போகிறாய்?

**விலோசனை**—(முத்தமிட்டு). இத்தண்டனை தான்---

விஜயன்—அப்பா, இந்தத்தண்டனையே வருவதென்றால்,நான் தினமும் இப்படியே தவறு செய்வேனே.

விலோசனை—ஆம், செய்வீர்---பார்த்திரா பிராணநாதா, மோஹனுவை: இப்படியும் அவள் செய்யலாமா?

விஜயன்—அதை ஏன் மறுபடியும் எண்ணுகிறாய் விலோசனா? அந்தோ! பார்த்தனையா உன் கால் சிவந்து விட்டது!

விலோசனை—ஓ ஹோ! எல்லாம் தெரியும் எனக்கு. தாம் முதலில் போய் ஊஞ்சலில் உட்காரும்.

விஜயன்—இல்லை, நீ தான் உட்கார வேண்டும் முன்பு.

விலோசனை—என்ன? உட்காருகிறீரா இல்லையா?

விஜயன்—அடடா! என்ன அதிகாரம்!

விலோசனை—போய் உட்காரும்.

விஜயன்—நான் போகமாட்டேன்.

விலோசனை—போகமாட்டீரா? ஆனால் நான்---

விஜயன்—இல்லை இல்லை, விலோசனா. இதோ உட்காருகிறேன் (ஊஞ்சலில் உட்காருகிறான்)

விலோசனை—(அருகமர்ந்து,) என்ன பிராணநாதா, இப்படி வியர்க்கிறதே, தமது முகத்தில்? (துடைக்கிறாள்)—இவ்வளவு நேரமா பிராணநாதா தாம் வர?

விஜயன்—என்ன செய்வேன் விலோசனா நான்? அரண்மனை வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு வர, இவ்வளவு நேரமாயிற்று.

விலோசனை—எப்போதும் அரண்மனை வேலைதானா உமக்கு?

விஜயன்—வேறென்ன வேலை இருக்கிறது?

விலோசனை—ஆமாம், அந்த வேலையையே கவனியுங்கள் போய். (போகிறாள்)

விஜயன்—விலோசனா, விலோசனா, இப்படிவா. (வர) இதற்கா இவ்வளவு கோபம்?

விலோசனை—பின் என்ன? எந்நேரமும் அதே வேலை என்றால்?

விஜயன்—என்ன விலோசனா, சற்றும் யோசியாமல் ஒரே பிடிவாதமாய் வார்த்தையாடுகிறாயே? நான் அரண்மனை வியவகாரங்களைக் கவனியாமல் இருப்பேனானால், நமது பகைவர்கள் எல்லாம், தலைகால் தெரியாமல் ஆடுவரே. பார், அந்த குர்ஜர மன்னன் செருக்கை இன்னும் சில நாட்களுள் அடக்கப் போகிறேன். அதற்காகவே, அதற்கு வேண்டிய முயற்சிகளை எல்லாம் இதுவரை செய்து கொண்டிருந்தேன்.

விலோசனை—இவற்றை எல்லாம் ஏன் என்னிடம் சொல்கிறீர்? நீர் எப்படியாவது போம். எந்நேரமும் உமக்கு இது தானே வேலை?

விஜயன்—கண்ணே, வா இப்படி—எனக்குவேறு என்ன தான் வேலை இருக்கிறது? நல்லது, நீ ஏதாவது ஒருவேலையிடு, நான் செய்கிறேன். உம், என்னவேலை இடப்போகிறாய்?

விலோசனை—(அருகமர்ந்து) நான் சொல்கிற வேலையைச் செய்கிறீரா?

விஜயன்—என்ன வேலை சொல்லப் போகிறாய்? ஓஹோ! தெரிந்துகொண்டேன். எந்நேரமும் உன் பக்கத்தில் இருக்கிற வேலை தானே?

விலோசனை—ஆம், அந்த வேலை மாத்திரம் செய்ய என்ன, பிராணநாதா?

விஜயன்—நல்ல வேலை இது! ஏன் எந்நேரமும் என்னுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கவா? வேண்டாம் வேண்டாம். அப்பா! எனக்கு இந்த வேலையேவேண்டாம்.

விலோசனை—ஆனால், நான் போகிறேன்.

விஜயன்—சரிசரி!—என்ன விலோசனா, என்னை இப்படி கஷ்டப்படுத்துகிறாயே? கண்ணல்ல; நான்சொல்வதைக்கேள். இப்படிவா.

விலோசனை—போம், நான் கேட்கமாட்டேன்—அது போனாற் போகிறது. தாம் நானை என்னைத் தெப்பத்தில் ஏற்றிச் செல்வதாகச் சொன்னீரே, அதையாவது செய்யப் போகிறீரா, இல்லையா?

விஜயன்—கண்ணே, அப்படியே செய்கிறேன். வா, என் மனம் களிக்க ஒரு பாட்டுப் பாடு, கேட்போம்.

விலோசனை—நான் பாடினால் எனக்குஎன்ன கொடுக்கிறீர்?

விஜயன்—என்ன வேண்டுமாயினும் தருகிறேன். இவ்வுலகில் நீ எதை மிகவும் உயர்ந்தது என்று எண்ணியுள்ளாயோ அதையே தருகிறேன்.

விலோசனை—உண்மையில்?

விஜயன்—உண்மையாக. (ஊஞ்சலில் உட்கார்ந்து) ஏதோ, பாடு.

விலோசனை—பார்ப்போம். (விஜயன் பாதத்தண்டை உட்கார்ந்து பாடுகிருள்.)

பியாகடை] [ஆதிதாளம்

பல்லவி.

பச்சை மயிலேறும் பார்வதி யருள் பாலா
பக்ஷம் வையாததென் சீலா

அநுபல்லவி.

இச்சையுடனுன்னை எந்நாளுமெண்ணியே
ஏங்கிநாடினேன் மனம் தாங்கும் துயர் கொண்டே (ப)

சரணம்.

பாரிலுனையன்றிப் பற்றுவேறில்லையே
பக்தரைக் கைவிடாதாள நீ வல்லையே
தேரிலென அறிந்தெய்தினேன் நல்லையே
சிந்தை களிப்புற ஆறுதல் சொல்லையே (ப)

விஜயன்—அடடா! இந்த சங்கீதவித்துவான் பாட்டை நான் கேட்பதனுற்ருன், அரண்மனை வித்துவான்களுக்கு இப்போது வேலையே யில்லாமற் போயிற்று.

விலோசனை—பாரும், என்னைப் பாடச் சொல்லி, பரிகாசமா செய்கிறீர்? (செல்கிருள்)

விஜயன்—(தடுத்து) என்னடா கஷ்டமாய் விட்டது! விலோசனு, விளையாடினல் கோபித்துக்கொள்கிருயே.

விலோசனை—இதுதான் விளையாட்டோ? அஃதிருக்கட்டும், எங்கே நான் பாடினல் ஏதோ தருகிறேன் என்றீரே?

விஜயன்—ஆமாம், மறந்துவிட்டேன். சங்கீத வித்வானுக்குப் பாடியபின் பரிசுகொடுக்க வேண்டும் அன்ருே?

விலோசனை—பாரும், மறுபடியும்.

விஜயன்—இல்லை இல்லை, விலோசனு; நீ கோபித்துக் கொள்ளாதே. (முத்தமிட்டு)இதுவே பரிசு. போதுமா?

விலோசனை—(தலைகுனிந்து) அம்மா! இது தானே எனக்கு உலகில் உயர்ந்தது?

விஜயன்—விலோசனா, இதனினும் காதலர்க்குஉயர்ந்த தொன்றுண்டோ இவ்வுலகில்?

விலோசனை—இல்லை, இல்லை, பிராணநாதா. நான் விளையாட்டாக அப்படி சொன்னேன்.

[சுகுமாரன் வருகிறான்]

விஜயன்—சுகுமாரா, ஏன் அங்கு நிற்கின்றாய்? வா. அருகில்.

சுகுமாரன்—அரசே, அடியேன் இச்சமயம் வந்ததைப்பற்றி மன்னிக்க வேண்டுகிறேன்.

விஜயன்—சுகுமாரா, விளையாடுகிறாயா என்ன என்னுடன்? நீ என்ன செய்தாய் என்று நான் உன்னை மன்னிப்பது? —விலோசனா, உனக்கென்ன இதற்குள் முகவேறுபாடு!

சுகுமாரன்—நான் வந்ததால், என்மீது கோபங்கொண்டிருக்கிறார்கள் போலத் தோற்றுகிறது.

விஜயன்—அப்படியா!—விலோசனா, உண்மையா அது?

விலோசனை—போம் பிராணநாதா. உங்களிருவருக்கும் வேறு வேலையில்லையா?

சுகுமாரன்—அம்மா, தங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் என் மேல்? இதோ போகிறேன் நான். (செல்கிறான்)

விஜயன்—கண்ணே, பாருன தண்ணன் மன வருத்தத்தோடு செல்கிறான்—சுகுமாரா, விலோசனை கூப்பிடுகிறாள், வா.

விலோசனை—அண்ணா, தங்கள்மீது எனக்கு என்ன கோபம்? ஒன்றும் இல்லை, வாருங்கள்.

விஜயன்—அப்பா!—சுகுமாரா, இப்போது சொல்: நீ எங்கே வந்தாய்?

சுகுமாரன்—ஒன்றும் விசேஷம் இல்லை-அரசே—

விஜயன்—என்ன அது மறைக்கப் பார்க்கிறாய்?

சுகுமாரன்—இல்லை அரசே. தாம் சேரனுடன் போர் செய்யப் போகவேண்டும் என்று மஹாராஜா உத்தரவிட்டிருக்கிறாராம்.

விஜயன்—யாருடன்?

சுகுமாரன்—அவன் தான், பாலசூர்யனுடன் அரசே.

விஜயன்—பாலசூரியனுடனா? இதை ஏன் மறைக்கப் பார்த்தாய்? அப்படி, எனக்கு இதுவரை மஹாராஜாவின் உத்தரவு வரவில்லையே.

[ஒரு சேவகன் ஒரு கடிதம் கொண்டுவருகிறான்.]

சுகுமாரன்—இதோ வந்தான் சேவகன். (சேவகனிடம் உள்ள கடிதத்தை வாங்கி விஜயனிடம் தந்து) இக்கடிதந்தான் என எண்ணுகிறேன்.

விஜயன்—(படித்து) ஆம்—சுகுமாரா, இப்போதே புறப்பட வேண்டுமாம்—நீ போய்த் தயாராக இரு. இதோ நான் வருகிறேன்—

[சேவகனும் சுகுமாரனும் போகிறார்கள்.]

விலோசனா, என்ன அழுகிறாய்? சீ! இவ்வளவு தானா நீ? வீரரை வாட்டியோட்டும் விஜயனின் மனைவியாகிய நீயோ இப்படி வருந்துவது! கண்ணே, (அவள் கண்ணைத் துடைத்து) விரைவில் நான் வெற்றிமாலையுடன் உன்னை வந்து காண்பேன். போய் வரவா?

விலோசனை—(பேசாமல் அழுதுகொண்டிருக்கிறாள்.)

விஜயன்—கண்ணல்ல; விலோசனா, என்னைப் பார். இந்த சமயத்தில் கண்ணீர் விடலாமா நீ?

விலோசனை—(கண்ணைத் துடைத்துக் கொள்கிறாள்)

விஜயன்—நான் போய் வரவா?

விலோசனை—என்னை ஏன் கேட்கிறீர்? தாம் வரும்போது யார் உயிருடன் இருக்கப்போகிறார்களோ, அவர்களைக் கேளும்— ஆ, பிராணநாதா!

விஜயன்—விலோசனா, இப்படி எல்லாம் சொல்லாதே. நான் விரைவில் வந்து விடுகிறேன்.

விலோசனை—அப்படியானால், நானும் உம்மோடு வருகிறேன். என்னையும் அழைத்துச் செல்லுங்கள்.

விஜயன்—நீ வருகிறாயா! கண்ணே, என்ன ஒன்றும் அறியாதவள் போல் பேசுகிறாயே? சண்டை என்றால் சாமானியமா? சில சமயங்களில் நாங்கள், கல்லினும் முள்ளினும் கடந்து செல்லவேண்டியிருக்கும். கொடிய மழைக்கும் கடிய காற்றிற்கும் அஞ்சாது எதிர்நிற்கவேண்டி வரும். கண்ணே, என் இக்கஷ்டங்களை எல்லாம் வீணே அனுபவிக்க வேண்டும் நீ? வேண்டாம், நான் சொல்வதைக் கேள். எனக்கு சந்தோஷமாய் விடைகொடுத்தனுப்பு. (ஜயபேரிகை முழங்க) அதோ எல்லாம் ஆயத்தமாய் விட்டது. நான் வரவா?

விலோசனை—(அவன் தோள்மேல் சாய்ந்து) பிராண நாதா!

## விருத்தம்.

உயிரையும்பிரிவேன் உடலையும்பிரிவேன் உலகினி
லரிதெனக் கூறும்
செயிரறு பொருள்களனைத்தையும் பிரிவேன் தியங்
கிடேன் மத்தினிற் பட்டத்
தயிரெனவருந்தும் ஏழையே னுள்ளம் தவித்திடத்
தமியளாயிங்கு
மயலொழித் தாண்ட மன்னவா உம்மை
மற்றியா னெங்ஙனம் பிரிவேன்!

விஜயன்—விலோசனா! தேவரே அன்றி அம்மூவரே என்முன் வரினும் அவர்களையும் வெற்றி கொள்வேன் நான். அதைரியப்படாதே நீ.

சுகுமாரன்—(வந்து) அரசே, எல்லாம் சித்தமாயது—அம்மா, தாம் ஒன்றற்கும் அஞ்சவேண்டாம். அவருக்கு சந்தோஷமாய் விடைகொடுத்தனுப்பும்.

விலோசனை—போய் வாரும் பிராணநாதா.

[வெளியில் ஜயமுண்டாருக என்னும் கோஷமுண்டாகிறது]

விஜயன்—இதோ வந்தேன்.

[விஜயன் சுகுமாரனுடன் குதித்தோடுகிறான். விலோசனை அவன் போனதிசையைப் பார்த்துப் பார்த்து நின்று வேறு வழியாய்ச் செல்கிறாள்.]

## மூன்றாமங்கம்—முதற்காட்சி.

**களம்: காஞ்சி அரண்மனை—காலம்: பிற்பகல்.**

**வசீகரன்**—ஏனையா இது நல்ல சமயம் அல்ல? ஆமாம், அப்புறம் நல்ல சமயம் இது.

**கணதேவன்**—அப்புறம்?

**வசீகரன்**—அப்புறம், சொல்லுமையா.

**கணதேவன்**—அந்த அப்புறம் வரவில்லையே என்றுதான்பார்த்தேன். உம், என்னகேட்டீர்? எதற்கு நல்ல சமயம்?

**வசீகரன்**—நீர் எதற்கு என்று எண்ணுகிறீர்? இது நல்ல சமயம் என்று தானே தோற்றுகிறது?

**கணதேவன்**—கேட்பானேன்? நல்ல சமயம் தான். (ஒரு புறமாய்) உன் தலையைக் கொண்டுபோக:

**வசீகரன்**—தெரிந்து கொண்டீரா?

**கணதேவன்**—ஆஹா, தெரிந்துகொண்டேன் (ஒரு புறமாய்) நீ மடையன் என்பதை.

**வசீகரன்**—அதற்கு நல்ல சமயம் அல்ல?

**கணதேவன்**—எதற்கு?

**வசீகரன்**—அதற்கையா?

**கணதேவன்**—சரிதான், அப்புறம்?

**வசீகரன்**—அப்புறம்—

**கணதேவன்**—இதற்கா? சரிதான், சந்தேகமே இல்லை.

**வசீகரன்**—என்ன ஐயா, நான் சொல்வதைக் கேளுமே.

**கணதேவன்**—இதோ என் இரண்டு காதையும் திறந்துகொண்டேனே. அப்புறம்?

**வசீகரன்**—அப்புறம்.

**கணதேவன்**—இந்த இழவைப்பா கேட்கவேண்டும்?

வசீகரன்—இல்லை ஐயா, விஜய அண்ணாத்தே சண்டைக்குப் போனார். தெரிகிறதா, நான் சொல்லியது? இப்போது விலோசனை தனியாக இருப்பாள் அல்ல?

கணதேவன்—ஓஹோ! அப்படியா! ஆமாம் தனியாக இருப்பார்கள்.

வசீகரன்—சரி! சரி சரி, நல்ல சமயம் அல்ல? தனியாக இருப்பாள். நான் போகலாமா?

கணதேவன்—எங்கே?

வசீகரன்—விலோசனையிடம்.

கணதேவன்—ஏன்?

வசீகரன்—என்ன ஐயா, நான் இப்போது எப்படி வந்திருக்கிறேன்; தெரியவில்லையா?

கணதேவன்—அப்புறம்?

வசீகரன்—அப்புறம்?

கணதேவன்—ஆம் இதுவேசரி—எங்கே போகுதீர் சொல்லும்.

வசீகரன்—நீர் சொல்லும் ஐயா, நான் எங்கே போகிறேன்?

கணதேவன்—என்னைக் கேட்டால்?

வசீகரன்—என்னஐயா, இது தெரியவில்லையா? நான் போய், என்னைக் கலியாணம் செய்துகொள் என்று கேட்கப் போகிறேன்.

கணதேவன்—ஓ ஹோ! அப்படியா? என்ன பைத்தியம் ஐயா உமக்கு? இப்படியா போய்க் கேட்பது? அப்படி கேட்டால், அந்த அம்மாள் உம்மை ஒன்றும் அறியா மூடன் என்று சொல்லிவிடுவார்களே.

வசீகரன்—ஏன் நான் அழகாய் இல்லையா? ஏன் ஐயா, நான் விஜய அண்ணாத்தயே பார்க்கிலும் எதிலையா குறைந்து பூட்டேன்?

கணதேவன்—அதைக் கேட்குதீரா? என்னகுறைவு? கையில்லையா, காலில்லையா? ஆனால் ஒன்றுதான் குறைவு- உம்,

பாதகம் இல்லை. அஃதிருக்கட்டும், கலியாணம் என்று கேளாதீர்.

வசீகரன்—பின் என்ன என்று ஐயா கேட்பது?

கணதேவன்—அப்படி கேட்டால் அல்லவோ? அந்த அம்மாள் முன்னமேகலியாணம்ஆகப்பெற்றவர். தெரிகிறதா? அவரைப்போய் மறுபடியும் கலியாணம் செய்துகொள் என்று கேட்பது கூடாது.

வசீகரன்—இரண்டாவது என்னை—

கணதேவன்—அடடே! இரண்டாவதா? அப்படியானால், அதைக் கலியாணம் என்று சொல்வது?

வசீகரன்—உம். என்ன சொல்வது?

கணதேவன்—சொல்கிறேன், அப்புறம்.

வசீகரன்—அப்புறம்—

கணதேவன்—போதும் நிறுத்தும். இங்கிருந்து போகவேண்டும், தெரிகிறதா? நடந்து போகவேண்டும்.

வசீகரன்—அப்புறம்?

கணதேவன்—காலால் நடந்து போகவேண்டும்

வசீகரன்—தெரியும்.

கணதேவன்—என்ன தெரியும்? எதோ நடந்து காட்டும்.

வசீகரன்—(நடக்கிறான்)

கணதேவன்—ஊம் ஊம். அது போதாது. (காலை வளைத்து நடந்து காட்டி) இப்படி நடந்து செல்லும்

வசீகரன்—(அப்படி நடக்கிறான்)

கணதேவன்—அப்படி. அப்புறம்?

வசீகரன்—அப்புறம் என்ன ஐயா?

கணதேவன்—அப்புறம் அப்படி நடந்துபோய், கேளும்.

வசீகரன்—என்ன என்று?

கணதேவன்—எனக்கு விரட்டி கலியாணம் செய் அம்மா என்று.

வசீகரன்—என்ன! விரட்டி கலியாணமா?

கணதேவன்—ஆம், மறந்துவிடாதீர்.

வசீகரன்—என்ன ஐயா, செத்தால் தானே விறட்டிகலியாணம்?

கணதேவன்—போம் ஐயா, உமக்கு ஒன்றும் தெரியவில்லை. இரண்டாவது தானே கேட்டீர் ?

வசீகரன்—ஆம்.

கணதேவன்—அதைத்தான் விறட்டிகலியாணம்என்பது. அது கூட உங்களுக்குத் தெரியவில்லையே.

வசீகரன்—இப்போது தெரிகிறது, தெரிகிறது. விறட்டி கலியாணமா—ஓஹோ ! கேட்கிறேன் ?

கணதேவன்—மறந்து போகப் போகிறீர்—(ஒரு புறமாய்) இதோ இவன் அண்ணன் வருகிறான். இவர்கள் எண்ணத்தை இன்னும் அறிகிறேன்—ஐயா, அதோ யார் வருகிறது பாரும். (அவன்போகப் பார்த்து ஓரிடத்தில் மறைந்து கொள்கிறான்.)

[சித்திரபாஹு வருகிறான்]

வசீகரன்—அண்ணாத்தே, எனக்கு விறட்டி கலியாணம், எனக்கு விறட்டி கலியாணம்.

சித்திரபாஹு—என்ன ! அடே வசீகரா, என்ன வார்த்தை இது?

வசீகரன்—இல்லே அண்ணாத்தே நான் போய் இப்போ விலோசனையே எனக்கு விறட்டி கலியாணம் செய் என்று கேட்கப் போறேன்.

சித்திரபாஹு—இந்த முழு முண்டத்தைக் கட்டிக்கொண்டு அழுகிறது, எனக்குப்போதும் என்று போகிறது—முண்டமே, கலியாணம் என்று சொல்.

வசீகரன்—ஊம் ஊம் ; நானுமுண்டம் ! எனக்குத்தெரியாதா? இரண்டாவது பண்ணுவது விறட்டி கலியாணம். ஒஹோ ! நீ போய் விறட்டி கலியாணம் பண்ணிக்கப்போறாயா ?

சித்திரபாஹு—சரி, அதைநானே உனக்காகப் போய்க் கேட்கிறேன். நீ போ.

வசீகரன்—நான் போனால் :

சித்திரபாஹு—வசிகரா, இது வரையில் உனக்காக நான் பட்ட கஷ்டங்கள் எல்லாம் பாழாய்ப் போய்விடும். நீ பேசாமல் போ. நான் முடித்து விடுகிறேன்.

[வசிகரன் போகிறான்]

உம், என்னையே ஏறிட்டுப் பாராத அவள், இத்தன்மையோ மனநாடுவாள்!—பார்க்கிறேன் (செல்கிறான்)

குணதவன்—ஓஹோ! அப்படியா? (போகிறான்)

---

## மூன்றுமங்கம் இரண்டாங்காட்சி.

களம்: சயனகிருஹம் - காலம்: இரவு.

67965

விலோசனை—என்னடி! முன்னரே வருவதாகக் கூறி அனுப்பினரே! இன்னும் என் வராமல் இருக்கிறார்! ஐயோ! அவர் போம்போதே, யான் வேண்டாம் என்று தடுத்தேன். அதையும் கேளாமல் சென்றாரே அவர். மோஹனை, போன இடத்தில், எதிரி பலம் உடையவனாய் இருந்தால், அவர் என்னடி செய்வார்!—பிராணநாதா, தாம் இப்படியும் என்னைத் தனியே விட்டுச் செல்லலாமா!

மோஹனை—ஏனம்மா, உமக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா என்ன? அவரைப் பார்க்கிலும் பலவானா அந்த பாலசூர்யன்?

விலோசனை—அவன் வாள்வித்தையில் அதிகசமர்த்தன் என்று, என்பிதா பலமுறையும் சொல்லக் கேட்டுளேனே! மிகவும் கொடியனும். மோஹனை, ஜயசூடாமணியார் தம் பிள்ளைகளில் ஒருவரை அனுப்பலாகாதா! எப்போதும் இவர் தானா போகவேண்டும்! சண்டை என்றால் அவர் என் பிராணநாதரையே அனுப்புகிறாரே—அந்தோ! என் மாமி மாமன் இருந்தால் இப்படி நடக்குமா!

மோஹனை—தாம் ஏனம்மா எதை எதையோ யோசிக்கிறீர்? போருக்குச் சென்றவர் வெற்றிமாலையுடன் திரும்பி வரப்போகிறார்.

O-, 2M4P, V

விலோசனே—மோஹனு, சண்டையைப் பற்றி நீ என்ன அறிவாய்! வெற்றியும் தோல்வியும் சண்டை முடியும் வரை, இன்னருடைய தென்று சொல்லவே இயலாதே.

மோஹனு—அப்படிப்பட்ட சண்டையா என்ன இது! தாம் சொல்வது,எலியை எதிர்க்கச் சென்ற புலி,எங்கே அந்த எலியால் ஹதமாய் விடுகிறதோ என்று எண்ணுவாரது வார்த்தையைப்போல இருக்கிறதே. நமது விஜயருடைய வீரமெங்கே அந்த பாலசூர்யனுடைய வீரமெங்கே!

விலோசனே—ஆம். அவனைப்பற்றி என் பிராணநாதரும் சொல்லி இருக்கிருர். நம்முடைய ஊருக்கு வந்திருந்தபோது அவனை என் பிராணநாதர் வாட்போர் புரிந்து வெற்றி கொண்டாராம்.—ஒரு வேளை அதை அவன் மனதில் வைத்துக்கொண்டு வஞ்சகமாய்த் தன் வன்சினத்தை முடித்துக்கொள்வானே!

மோஹனு—அம்மா, தாம் இப்படி எல்லாம் எண்ணுவது நல்லதே அல்ல. அரசர்களுக்குப்போர் என்பதே ஒருபெரிய விளையாட்டல்லவா? அவர்கள் அதனையே விநோதமாக எண்ணி இருக்கிருர்கள். சாமானிய அரசர்களுக்கே அப்படி என்ருல், உமது புருஷருக்குச் சொல்லவும் வேண்டுமா? எழுந்திரும் உணவு கொள்ள.

விலோசனே—மோஹனு, எனக்கு உணவும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். நீ போய் உணவருந்தி வா.

மோஹனு—என்ன! எதற்காக அம்மா உணவு வேண்டாம் என்கிறீர்? வாரும் அம்மா, பசியுடன் பட்டினி கிடப்பது நல்லதல்ல.

விலோசனே—என்னை உபத்திரவம் செய்யாதே, நீபோ.

மோஹனு—தாமே உடம்பைக் கெடுத்துக்கொள்கிறீர். பாலாவது கொண்டுவருகிறேன், பருகுகிறீரா!

விலோசனே—பார்ப்போம், நீ உணவருந்திவா.—

[மோஹனு போகிருள்.]

ஐயோ! என் பிராணநாதரைக் கண்ணிற் காணுத ஒவ்வொரு க்ஷணமும் ஒவ்வொரு யுகம்போலக் கழிகிறதே!

போனவர், அங்கு இன்னும் என்னதான் செய்துகொண்டிருப்பர்? இன்றே வருகிறேன் என்று எழுதினரே! அந்தோ! இந்நேரமாகியும் வரவில்லையே—யார் அது! (எழுந்து) என் பிராணநாதர் தான் வருகிறார் போலும்.

[சித்திரபாஹு வருகிறான்.]

ஆ!—ஐயா, தாம் இங்குவந்தகாரணம் என்ன?

சித்திரபாஹு—ஏன், வரப்படாதோ நான்?

விலோசனை—ஆடவர், பெண்கள் தனித்திருக்கும் இடத்தில் வரப்படாதென, நான் சொல்லவும் வேண்டுமோ?

சித்திரபாஹு—அப்படியா! தெரியாது வந்தேன். அஃதிருக்கட்டும். விலோசனு, நான் சொல்வதைக் கேள். விஜயன் இனி இவ்விடத்தில் மீட்டும் வரப்போகிறதே இல்லை.

விலோசனை—ஆ! என்ன!

சித்திரபாஹு—என்னவாவது? இந்நேரம் அவன் மாண்டு மண்ணாயிருப்பான்.

விலோசனை—ஆ! பிராணநாதா!

சித்திரபாஹு—விலோசனு, அவனைப் பிராணநாதன் என எண்ணி ஏன் உன் பெருமையை எல்லாம் அழித்துக்கொள்கிறாய்?

விலோசனை—ஐயா—தாம் அவரைப்பற்றி ஒரு வார்த்தையாவது இழிவாகப் பேசுமுன்னம், இங்கிருந்து செல்லும். இதற்காகவோ தாம் இவ்விடம் வந்தீர்?

சித்திரபாஹு—நான் சொல்வதைக் கேள், விலோசனு.

விலோசனை—தங்கள் வார்த்தைக்கு என் செவியிடந்தராது, செல்லும்.

சித்திரபாஹு—விலோசனு அங்ஙனம் சொல்லிவிடாதே. நான் அன்று வில்லை எடுத்து வளைக்கும் போது, உன்னையே மனதில் எண்ணிவிட்டேன். கண்ணே, அந்த எண்ணம் இன்னும் என் மனதைவிட்டு நீங்கவே இல்லை. என் செய்வேன் நான்! அன்று முதல் உன்னைத் தனித்துக் கண்டு, என்கோரிக்கையை ஈடேற்றிக்கொள்ளவேண்டும் என்று

எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்தேன். கண்ணே, இன்றே சமயம் வாய்த்தது நீ எப்படியாவது என் மனோரதத்தைப் பூர்த்தி செய்யவேண்டும். விஜயனை ஒருபொருளாக எண்ணாதே. அவனுக்கு இந்த இராஜ்ஜியத்தில் என்ன சுதந்தரம் உண்டு? நான் போ என்றால் போகக்கூடியவன். கண்ணே, உன் யௌவனத்தையும், மேலாம் அழகையும், என் ஓர் ஏழையின் பொருட்டு அவலமாக்கிக் கொள்கிறாய்! விலோசனா, உன்மீது நான் கொண்ட காதலுக்கு, கரிய கடலும் அளவாகாது. கண்ணே, என்ன சொல்கிறாய்?

விலோசனை—சொல்லவேண்டியதை எல்லாம் சொல்லியாயிற்றோ? அல்லது, இன்னும் ஏதாவது இருக்கிறதோ?

சித்திரபாஹு—விலோசனா, என்னை ஏளனம் செய்யாதே.

விலோசனை—ஐயா, தம்முடைய உயர்வாகிய குணத்தை, இன்றே நான் அறிந்தேன். தாங்கள் தயை செய்து இவ்விடத்தைவிட்டுச் செல்லுங்கள்.

சித்திரபாஹு—செல்லுதற்கன்றோ யான் வந்தது.

விலோசனை—ஆனால், போகமாட்டீரா?

சித்திரபாஹு—விலோசனா, புறக்கணிக்காதே என்னை. என் உயிர் உன்பாதத்தில் ஊசல் ஆடுகிறது. கண்ணே, என் மனத்துயரின் அளவை நீ அறிந்தால், இங்ஙனம் சொல்லவே சொல்லாய்.

விலோசனை—உம், உத்தம க்ஷத்திரிய குலத்திற் பிறந்தும், அக்குலத்திற்கேற்ற குணம் இல்லாமற் போயதே தம்மிடம்! ஐயா, தம்பியின் தாரம் என்பதை மறந்து வார்த்தையாடுகிறீரா? அப்படியானால், நானே இதோ அதை ஞாபகப்படுத்துகிறேன். இப்போதாவது செல்லும்.

சித்திரபாஹு—கண்ணே,—

விலோசனை—இனி அவ்விளியை விடுத்துப் பேசும். சொல்கிறேன். நான் தங்கள் தம்பியின் தாரம். மேலும் தாம் வார்த்தையாடுவது நல்லதல்ல.

சித்திரபாஹு—நல்லதென்ன கெட்டதென்ன, விலோசனா? அவற்றை எல்லாம் ஏன் எண்ணுகிறாய் இப்போது?

விலோசனை—நான் உமக்கு நல்லபடியாய்ச் சொல்கிறேன். தாம் ஏதோ அறியாமையால் இப்படி எல்லாம் வார்த்தையாடுகிறீர். பேசாமற் போம்.

சித்திரபாஹு—போவது என்றால், கண்ணே, நான் உயிர் துறப்பதே யாகும்.

விலோசனை—இனி யான் உம்மிடம் பேசேன்.

சித்திரபாஹு—கண்ணே, அப்படி சொல்லாதே. எப்படியாவது, நான் பல நாளாகக் கோரி இருந்த எண்ணத்தை இன்று முற்றுவிக்கப் பார்.

விலோசனை—இந்தச் சனியனை எப்படி ஒழிப்பேன்!—மோஹனா!

சித்திரபாஹு—அவள், நான்போனாலன்றி, இவ்விடம்வாராள். விலோசனா, நான் சொல்வதைக் கேள். என் தந்தைக்குப் பின், இவ்விராஜ்ஜியத்திற் குரிமையானவன் நான் அன்றோ? நீ என் மனத்திற்கு இசைந்து நடப்பாய் ஆயின் உன்னை இராணி என்று எவரும் கொண்டாட உன்னத ஸ்திதியில் வைத்திருப்பேன்.

விலோசனை—அப்போது நான், இதுவரை ஓர் ஏழையாய் இருக்கிறேன் என்று பட்டதோ உங்கள் மனத்திற்கு? கனவாய் மதிக்கும் செல்வத்தால் செருக்குறும் மங்கையரிடம் இவ்வார்த்தையைச் சொல்லும்போய். ஏன் வீணே தங்களை வெளியாக்கிக் கொள்கிறீர், தங்கள் துர்க்குணத்தால்?

சித்திரபாஹு—கண்ணே, நீ என்ன சொல்லினும், அவை பூஷணமே யாகும். (அருகில் செல்கிறான்)

விலோசனை—சற்றுத் தூரத்தில் நில்லும்—மோஹனா! மோஹனா! ஐயோ! எங்கே போய் விட்டாள் அவள்!

சித்திரபாஹு—கண்ணே, தோழனாய் என்னை ஏற்றுக்கொள்ளலாகாதா? தோழியேன் இப்போது.

விலோசனா—சீ! நடைப் பிணமே! நீ போகிறாயா, இல்லையா?

சித்திரபாஹு—விலோசனா, இன்றே நான் பாக்கியவானானேன். உன் அருகில் இருந்து, இத்தகைய வார்த்தைகளால் நீ என்னை அழைக்க, அதைக்கேட்டிருந்தாலும்போதுமே!

விலோசனா!—ஐயோ! நீயுமோர் நரனாய் நீணிலத்துதித்தாய்! நீ என் செய்வாய்! சொல்லினேன், வீணே கோபத்தை மூட்டவேண்டாம்.

சித்திரபாஹு—உன் கோபங் கொண்டு என்னை என்ன செய்யினும், உன்னை விடுவேனோ நான்? (அவள் கரத்தைப் பற்றச்செல்கிறான்)

விலோசனா—(ஓர் புறம் சென்று) மடையா, அருகில் வராதே.

சித்திரபாஹு—ஆ! என்ன சொல்லினை? விலோசனா, மடையனா நான்? காட்டுகிறேன் என் மடத்தனத்தை—விலோசனா, வீணாய்க் கோபம் கொண்டேன். நான்சொல்வதைக் கேள்.

[வசிகரன் வருகிறான்.]

வசிகரன்—அண்ணாத்தே, அண்ணாத்தே, சின்ன அண்ணாத்தே.

சித்திரபாஹு—வா, வா போவோம்.

[இருவரும் செல்கிறார்கள். மற்றோர் புறமாய் விஜயன் வருகிறான்.]

விலோசனா—பிராண நாதா! (அவனைத் தழுவுகிறாள்)

விஜயன்—(அவ்விருவர் சென்ற இடத்தையும் விலோசனையையும் நோக்கி) விலோசனா, என்ன உடல் நடுங்குகிறது! என்ன! ஏன் முகம் வாடியது!

விலோசனா—ஒன்றும் இல்லை பிராணநாதா. தாம் வாரும். மஞ்சத்தின் மீது உட்காரும்.

விஜயன்—அஃதிருக்கட்டும்; அவர்கள் ஏன் இவ்விடம் வந்தனர்?

விலோசனா—(தனக்குள்) ஐயோ! நான் என்ன என்று சொல்வது! பாவம், வீணாய் மடிந்து போவான் அப்பாவி!

விஜயன்—என்ன நான் கேட்கிறேன், நீ பேசாமல் இருக்கிறாய்?

விலோசனை—ஒன்றும் இல்லை பிராணநாதா, தாம் வாரும் என்றால்—

விஜயன்—நீ சொன்னாலன்றி நான் வரமாட்டேன்.

விலோசனை—(தனக்குள்) ஐயோ!—

விஜயன்—விலோசனா, என்ன அது மறைக்கப் பார்க்கிறாய், என்னிடத்தில்?

விலோசனை—என்ன பிராணநாதா, நான் எதை மறைக்கப் பார்த்தேன்?

விஜயன்—பின் என்ன? அவர்கள் ஏன் இவ்விடம் வந்தனர், சொல்.

விலோசனை—அதையா கேட்டீர்? பாவம்! அவர்கள், நான் தாங்கள் வராததால் வருந்தியிருந்ததைக் கேட்டு, தாம் விரைவில் வந்து விடுவீர் என்று தேறுதல் சொல்லிச் சென்றனர்.

விஜயன்—அப்படியா?—ஆனால், உன்உடல் இப்படிஏன் நடுக்கம் கொள்ளவேண்டும்?

விலோசனை—எனக்கென்ன நடுக்கம்? வந்து உட்காரும், சொல்கிறேன்.

விஜயன்—இல்லை, என்ன காரணம் உன்முக வாட்டத்திற்கு?

விலோசனை—வாட்டம் ஒன்றும் இல்லை பிராணநாதா. வந்த இளைப்புத்தீர சற்று உட்காருமே. பால்கொண்டு வரட்டுமா?

விஜயன்—விலோசனா, இவ்வுபசாரமெல்லாம் எனக்கு வேண்டாம். என்ன காரணம், உன்முக வாட்டத்திற்குச்சொல்?

விலோசனை—எனக்கென்ன வாட்டம்! தாம் வராததால், தம்மை நினைந்திருந்தேனே, அது தான்.

விஜயன்—நல்லது, நான் என் பிதாவைக் கண்டு வருகிறேன்.

விலோசனை—(தடுத்து) இப்போது தான் வந்தீரே, இதற்குள் போகவேண்டுமா?

விஜயன்—போன இடத்தில், நேர்ந்த விசேஷத்தைத் தெரிவிக்க வேண்டாமா அவரிடம்?

விலோசனை—அப்போது என்னிடம் தெரிவிக்க வேண்டியதில்லையோ?

விஜயன்—ஆம், உண்மை தான் என்னவேண்டும், சொல்.

விலோசனை—வாரும், இப்படி உட்காரும்.

விஜயன்—(உட்கார்ந்து) உம், என்ன கேட்கப் போகிறாய்? —இல்லை, நான் வருகிறேன். (விரைந்து போகிறான்)

விலோசனை—ஐயோ! என்ன திடீரெனப் போய் விட்டாரே! முகமும் ஓர் விதமாய் மாறியது!—ஏனோ பாவிநான் அவரிடம் உண்மையைச் சொல்லாமற் போனேன்!—சீ, பாவம்! நான் நடந்த விஷயத்தை என் பிராணநாதரிடம் சொல்லின், அவர் கோபங்கொண்டு அவனைக் கொன்றே விடுவார்! நான் ஏன் அப்பழிக்காளாக வேண்டும்—எங்கே, போன மோஹனை இன்னும் வரவில்லை.

(செல்கிறாள்.)

---

## மூன்றாமங்கம்—மூன்றாங்காட்சி.

களம்: காஞ்சி அரண்மனை—காலம்: பிற்பகல்.

களம்: காஞ்சி அரண்மனையில் ஓர் அறை—காலம்: இரவு.

சுகுமாரன்—கணதேவா, நீ சொல்வன யாவும் உண்மையா?

கணதேவன்—தாமுமா சந்தேகப் படுகிறீர்? நான் ஏன் இவ் விஷயங்களில் எல்லாம் பொய் சொல்லப் போகிறேன்.

சுகுமாரன்—அவன் இவ்வளவு தந்திரனாய்க் காரியங்களைச் செய்வான் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. மஹாராஜாவிடம் விஜயர் வஞ்சகயாய் நடந்து கொண்டார் என்று கூறினான் என்றா சொல்கிறாய்?

கணதேவன்—அவன் சொல்லியது மாத்திரம் அல்லவே! மஹாராஜாவும் அப்பாபியின் வார்த்தையை நம்பிவிட்டாரே.

சுகுமாரன்—என்ன! பால சரஸ்வதியுடன் விஜயர் சேர்ந்து விட்டது உண்மையென்றா?

கணதேவன்—ஆம், சேர்ந்து அவரையே எதிர்க்க எண்ணங் கொண் டிருப்பதாக!

சுகுமாரன்— ஆஹா! என்ன அநியாயம் !—கணதேவா, நான் வருகிறேன். இன்னும் என்ன என்ன நடக்கின்றனவோ அவற்றையும் கவனித்து என்னிடம் சொல். என்மனம் பதறுகிறது. நான் வருகிறேன்.

கணதேவன்—அப்படியேசெய்கிறேன்—அதோ அவர்கள்வருகிறார்கள். வாரும் நாம் போவோம்.

[இருவரும் போகிறார்கள். வேறு வழியாய்ச் சித்திர பாஹுவும் வசீகரனும் வருகிறார்கள்.]

சித்திரபாஹு—ஆம், நான் சொல்கிறதுபோலச் செய். நீ பேசாமல் விலோசனையிடம் போ. போய் என்னைக் கலியாணம் செய்துகொள் என்று கேள்.

வசீகரன்—அ! அ! கலியாணமா? அல்ல, அல்ல, விறட்டி கலியாணம்.

சித்திரபாஹு—மடையா, நான் சொல்வதைக்கேள். இல்லாவிடின், அவள் உன்னைத் திரும்பியும் பாராள்.

வசீகரன்—ஹும்—

சித்திரபாஹு—நீ அவ்விடம்சென்று, சிறிதுதூரத்திலிருந்தே, கெஞ்சிக்கேள். அவள் உன்னைப்பார்த்து நகைப்பாள். தெரிகிறதா? நகைத்தவுடன் அவள் அருகிற் சென்று, அவள் கரத்தைப் பற்றிக்கொள். இணங்கி விடுவாள்.

வசீகரன்—இதுதான் நல்லவழி.

சித்திரபாஹு—போ சீக்கிரம்.

வசீகரன்—இதோ, (போய்வந்து) மறந்துபூட்டேனே, போய்க் கலியாணம் என்றுகேட்பதா, விறட்டி கலியாணம்என்று கேட்பதா?

சித்திரபாஹு—கலியாணம் என்று கேள்.

வசீகரன்—விறட்டிகலியாணம் என்று கேட்கிறேனே?

சித்திபாஹு—வேண்டாம், அப்படிகேளாதே.

வசீகரன்—ஆனல், கலியாணம் விறட்டி கலியாணம் என்று, சேர்த்துக் கேட்கிறேன்.

சித்திரபாஹு—எப்படியாவதுசெய், போ—(வசிகரன் போகிறான்) ஹூம், இவன்;இனிமீள்வது அசாத்தியம் ! அசாத்தியம் !! இன்றுடன் ஒழியப் போகின்றான் இவன்-ஆஹா ! நான் ஒருவன் சுகமடைய என் இவர்களுடைய உயிரை யெல்லாம் போக்கவேண்டும்? சித்திரபாஹு ! உன் மனமும் இப்படி சஞ்சலப் படுவதோ? 'இக்காரியத்தி லெல்லாம் மன இரக்கங் காட்டினல், ஆம், என் மனோரதம் எப்படி நிறைவேறும்? இத்தத்தி யெப்படியும் அவளிடம் போகப்போகிறான். ஆஹா ! அவள் கெர்வம் என்னை மடையன் எனச் சொல்லச் சொல்லிய தல்லவா! மடையன் நான் ! விலோசனு, உன் வாயால் மடையன் என்று கூறப்பட்டவன் செய்யப்போகுந் திறத்தைப்பார்-மடையன் என்று கூறிய உன் உயிரை இன்றிரவு எமனுலகனுப்புகின்றேன். அடிபேதாய்! நான் உன்னை எவ்வளவு வேண்டியும் வருந்தி மன்றாடியும் அவற்றை யெல்லாம் மறுத்து மடையன் என்ற பட்டத்தையா என் தலையில் சுமத்தினாய்?—ஐயோ! நான்செய்ததவறினாலன்றோ அவள் அப்படி சொல்லினள்—அவள்மீது என்னகுற்றம்! நான் என்வீணாய் அவளுயிரைப் போக்க வேண்டும்! அந்தோ! அவள் என்மீது காட்டிய இரக்கத்தையும் மறந்தேனே! நடந்த விஷயத்தை அவள் விஜயனிடம்சொல்லியிருப்பாளாயின் என்ன என்ன தீங்குகள் நேரிட்டிருக்கும் எனக்கு. இத்தகையஅருங்குணமமைந்த அப்பெண்மணியைக் கொல்ல நான் ஏன் காரணமாக வேண்டும்? சீ ! சீ !! இது என்னஎண்ணம்- இப்படியும் என்மனம் மாறுபடுமோ-இவற்றையெல்லாம் இப்போது எண்ணி யாவதென்ன? பிறர் சுகமாய் வாழ நான் அதைக்கண்டு என்காலத்தைக் கலக்கத்துடன் கழிப்பதோ ! இனி யென்ன செய்வது! என்னசெய்வதாவது? செய்ய வேண்டியன எல்லாம் செய்தாயிற்றே-என்பிதாவின் மனமும் இப்போது ஒருவாறுய்

அவன் விஷயத்தில் மாறு பட்டிருக்கிறது. இனி அதைப் பலப்படுத்துவது தான் என்வேலை! அதுவும் இன்று முடிந்துவிடப் போகிறது-என், முடிந்தேவிட்டது. சீ! விஜயன் தான் என்னுடன் பிறவாதவன், வசீகரன் எனக்கென்ன தீங்குசெய்தான்? அவனையோ என் வஞ்சகத்துக்குக் கருவியாகக் கொள்ளவேண்டும்? அவன் ஒருபாபமும் அறியாதவனாயிற்றே! என்னுடன் பிறந்த அவனை நான் ஏன் ஒழிக்க வேண்டும்—யோசிப்பதால் என்ன பயன்? அவன் தான் எனக்கு மேலான கருவியாகும் இது விஷயத்தில்—ஆம்! ஆம்! அவனைவிட்டால் என் கோரிக்கை நிறைவேறாது—எங்கே இன்னும் விஜயன்வரவில்லை! நான் அழைத்ததாக சேவகன் அவனிடம் போய்ச் சொல்ல வில்லையா? அவன் வந்ததும் என் வஞ்சகத்தினால் அவனைக் கொண்டே என் வேலையை முடித்துக் கொள்கிறேன். -ஐயோ! வசீகரன், இறந்தொழிவானே! வசீகரா, நீ என்னுடன் பிறந்ததற்கு இந்த உபகாரந்தான்செய்யப்போகிறேன் நான்—அவனிருந்தாலும் இவ்விராஜ்யத்தின் ஒரு பாகத்திற் குரியவனாவானன்றோ? அதற்கும் நானே ஏன் வழி விடவேண்டும். நல்ல சமயம்வாய்த்தது! இந்த வழியை விட்டால் உயிருடனிருந்தும் பிணத்திற்குச் சமானமானவனே நான்—அதோ வருகிறான் விஜயன்.

[விஜயன் வருகிறான்.]

விஜயன்—அண்ணா, தாம் என்னை அழைத்தீரா?

சித்திரபாஹு—ஆம் அப்பா!

விஜயன்—ஏன்?

சித்திரபாஹு—என்ன என்று சொல்வேன்! (பெருமூச்சுவிடுகிறான்)

விஜயன்—என்ன! ஏன் பெருமூச்சு விடுகின்றீர்? என்ன விசேஷம்?

சித்திரபாஹு—அப்பா, அதைநினைக்கவும் என் நெஞ்சம் பகீரென்கிறதே.

விஜயன்—எதை ?

சித்திரபாஹு—விஜயா, அதைச் சொல்லலாம் என்றால், என் நா எழவில்லை. நான் என்னசெய்வேன்!

விஜயன்—அண்ணா, தாம் இப்படி என்னைத் தயங்க வைப்பது நல்லதல்ல. என்ன விசேஷம் சொல்லும்.

சித்திரபாஹு—ஐயோ! வசிகரா, என்சொல்லைக் கேளாமற் போயினையே! விலோசனா, நீயாவது நான் அவ்வளவு கூறியதையும் எடுத்துக்கொள்ளலாகாதா!

விஜயன்—என்ன! என்ன!— அண்ணா, தாம் உண்மையை வெளியிடுகின்றீரா இல்லையா ?

சித்திரபாஹு—அப்பா, என்மீது ஏன் கோபம் கொள்கிறாய்? நான் உன்னிடம் உண்மையை வெளியிடவே, உன்னைஇவ்விடம் வரவழைத்தேன். அந்தோ! இதைநான் என் சொல்ல வேண்டும் ?

விஜயன்—அண்ணா, என் கோபம் மூண்டெரிகிறது! நடந்த விஷயத்தைச் சொல்கிறீரா, என்ன ?

சித்திரபாஹு—விஜயா, நான் சற்று முன்பாகவும், வசீகரனுக்கு எவ்வளவோ புத்தி புகட்டினேன். அவ்விருவரும் ஒரே பிடிவாதமாய் இருக்கிறார்கள். ஐயோ! நான் சகோதர துரோகம் உதவாது, அது கொடிய பாதகமாகும் என்று சொல்லியும், அவன் அதைக்கேளாமல், உனக்கென்ன இதைப்பற்றி என்று கூறிச் சென்றான்.

விஜயன்—என்ன இது! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே தாம் சொல்வது ?

சித்திரபாஹு— அப்பா, நம்முடைய குலத்தின் பெருமையே போய்விட்டதே. வெளியாருக்கு இது விஷயம் தெரியுமானால், நாம எல்லோரும் தற்கொலை புரிந்து கொள்ளவேண்டியதே, வேண்டியதே! மானம் அழிந்தபின் மகிதலத் திருந்தென்ன பயன் ?

விஜயன்—ஆ; மானமழிவதாவது ! அண்ணு, விலோசனையை த்தவருக எண்ணுகின்றீரா தாம் ?

சித்திரபாஹு—ஐயோ, அதை நானே சொல்ல லாகாதென இருந்தேன். நீயே சொல்லிவிட்டாய். அப்பா, அவள்செய் தது தவறல்ல; பாதகத்தினும் பாதகம் ?

விஜயன்—அண்ணு, இனி நான் பொறேன். விளக்கச்சொல்லும் விஷயத்தை.

சித்திரபாஹு—அப்பா, வசிகரன் சில நாளாக விலோசனை யின் மோகத்திற் சிக்கிக்கருத்தழிகிறுன்! அன்று நீ வரு வதற்கு முன், நான் அங்கிருந்தேனே, அது எதற்காக என்று எண்ணிணுய்? நான் நேரில் விலோசனையைக் கண்டு சொல்லவே சென்றேன். சொல்லியும் பார்த்தேன். அவள் அதைக்கேளாமல், உனக்கென்ன இதைப்பற்றி என்று கூறினள்.

விஜயன்—ஆ! ஈசனே! ஈசனே!—அண்ணு, தாம் கூறியயாவும் உண்மையா ?

சித்திரபாஹு—அப்பா, நான் ஏன் இதுவிஷயங்களில் பொய் சொல்லப்போகிறேன். உன்மீது ஆணை! நான் சொல்லிய யாவும் சத்தியம்.

விஜயன்—விலோசனையையா இப்படி சொல்கிறீர் ?

சித்திரபாஹு—ஆம், அப்பா; ஆம்.

விஜயன்—ஆம்! ஆம்! – அண்ணு (அவன் கரத்தைப்பற்றி) இதனை என்கண் முன்பாகத் தாம் ரூபிக்காமற் போனுல், தங்களை இம்மற்றோர் கரத்தினுல், மண்ணுடன் மண்ணு க்குவேன். என்ன சொல்கிறீர் ?

சித்திரபாஹு—ஐயையோ! இதற்குத் தானே உன்னிடம் சொல்லினேன்! ஈசனே, என்னைப்போலும், மூடர்கள் இருப்பாரோ இவ்வுலகில்! என்னகாலம் இது ?

விஜயன்—அண்ணு, காலத்தைப் பழிக்காதீர். கற்பரசியாய் விளங்கும் என் கண்மணியிடத்தில், இதுவரை ஒருகுற்ற த்தையும் கண்டேன் இல்லை. தாம் சற்றும் அச்சம் இன்றி

என்முன் இக்கொடிய வார்த்தைகளைப் புகன்றீர். நல்லது, இதனை ரூபிக்கின்றீரா இல்லையா?

சித்திரபாஹு—விஜயா, நான் உண்மையை உரைத்ததற்கு, இதுதானா பலன்?

விஜயன்—என் தலை வெடிப்பதுபோல் இருக்கிறது! இனி நான் உம்மைச் சும்மா விடேன். இம்மகிதலத்தில் அம்மதிமுகத்தாள் தன் செம்மையாம் கற்பை இழந்தாள் என்பதை நேரில் ரூபியும், ரூபியும்.

சித்திரபாஹு—அப்பா, விடு என்னை; நான் சொல்கிறேன்.

விஜயன்—விடேன் உம்மை? ரூபியும் விரைவில்.

சித்திரபாஹு—அப்படியா? விஜயா, நீ வசிகரனை ஒன்றும் செய்யா திருப்பதானால், சொல்கிறேன்

விஜயன்—அதை எல்லாம் கேளாதீர். ரூபியும் முன்பு.

சித்திரபாஹு—அப்பா, இப்போது உன்சயன கிருகத்தில் போய்ப்பார்; அவ்விருவரும் இருக்கும் கோலத்தை.

விஜயன்—என்ன! என் சயன கிருகத்திலா?

சித்திரபாஹு—ஆம்.

விஜயன்—இப்போது?

சித்திரபாஹு—ஆம்.

விஜயன்—ஆ! அப்படியா! (ஓடுகிறான்)

சித்திரபாஹு—உம், பழுத்துவிட்டது— இனி நான் இவ்விடத்தில் சும்மா இருக்கக்கூடாது. போனவன் எப்படியும் வசிகரனையும் விலோசனையையும் கொன்றே தீர்ப்பன்— நான் தந்தையிடம் சென்று, விஜயன் என்னைக் கொல்ல வந்தபோது, தப்பித்துக்கொண்டுவந்ததாகவும், எல்லோரையும் கொல்வதாக பிரதிக்ஞை செய்து கொண்டு வசிகரனை முதலிற் கொன்று விட்டதாகவும் கூறிக் கோபத்தை மூட்டுகிறேன். அப்போது தான், அவர்நான் கூறியவை யாவும் உண்மை என்று நம்புவார்—விஜயா, பார்த்துக்கொள் உன் உயிரை! (போகிறான்.)

# மூன்றாமங்கம்—நான்காங்காட்சி.

---

**களம்: சயனகிருகம்—காலம்: இரவு.**

[விலோசனை மஞ்சத்தின்மீது சயனித்துக் கொண்டிருக்கிறாள். வசீகரன் வந்து சுற்றுமுற்றும் பார்க்கிறான்.

**வசீகரன்**—அதோ! அதோ!—ஆ, என்ன ஒழுங்காய்ப் படுத்திருக்கிறாள். நான்போனவுடன் என்னை நாதா என்று கூப்பிடுவாள். அப்போது நான் அவளை என்ன என்று கூப்பிடுவது?—ஆம், கண்ணே என்று சொல்கிறேன். சொன்னதும் அருகே வருவாள், வந்து ஒரு முத்தம் கொடுப்பாள். ஆஹா! அந்த முத்தம் எப்படி எப்படி இருக்கும்! என்ன நான் வந்திருக்கிறேன். அவள் அவ்விடத்திலேயே இருக்கிறாளே? ஊம்ஊம், நான் வந்தது அவளுக்குத்தெரியும். விளையாட்டுக்காக, பேசாமல் இருக்கிறாள். தெரிந்து கொண்டேன், இவ்வளவும் என்மேல் ஆசையால் தான். நானே அருகில் வரட்டும் என்று சும்மா இருக்கிறாள். அருகிற் செல்கிறேன் (அருகிற்சென்று)—தூங்குகிறாள்!—எழுப்பட்டுமா? எழுப்பினால், இன்னும் என்மேல் அதிக ஆசைகொள்வாள். ஆம், ஆம்! ஆசை என்மேல் இருக்குமா இல்லாதிருக்குமா?—இருக்கிறது,இருக்கிறது. நான்தான் இங்கு நேரில்வந்து விட்டேனே. ஆசையில்லாமலும் இருக்குமா?—கண்ணை மூடிக்கொண்டிருக்கிறாளே. உம், சும்மா சும்மா. நானே போய் ஒருமுத்தம் கொடுக்கிறேன், இன்னும் ஆசை அதிகம் வைப்பாள் (முத்தம் கொடுக்கப் போகிறான்.)

[விஜயன் ஓடி வருகிறான்.]

**விஜயன்**—ஆ! பாதகா! (அவனைக்குத்தப் போம்போது, ஓடிவிடுகிறான்)—அடே! எங்கே போகப்போகிறாய், பார்க்கிறேன்! பாதகா!—எங்கே அப்பேய்?— ஆஹாஹா (நகைத்து) என்ன மாயக்கள்ளி இவள்! உறங்குபவள் போல் பாசாங்கு செய்கிறாள். ஏபேயே, இன்னும் என்ன என்னதான் செய்யத் துணியாய் நீ? நான் வந்து

எதிராக இருந்தும், அதையும் கவனியாமல், ஒருபயமும் இன்றி, உறங்குபவள்போலப் பாசாங்கு செய்கிருளே! —பேஷ்! விலோசனு, சமர்த்தியே நீ!பாதகி! மாயக்கள்ளி! மடிவாய் நீ அவனுடன்— வருவாய் என் வாளாம் உயிர் நண்பனே, (வாளையுருவி) வாழ்க்கைத் துணையாய் இது வரை வாழ்ந்த இவள், வஞ்சகமாய் நடந்த விஷயத்தைக் கண்டாய் அன்றோ? துணைசெய்வாய் இப்போது.(குத்தப் போகிருன்)—விலோசனு—! ஐயோ! இவ்வளவு அழகை யும்வீணில் பாழ்படுத்திக்கொண்டனேயே! வடிவத்தில் ஒப் புயர்வற்று விளங்கிய பாவையே! பைங்கனி நிகர்ந்த நின் பவளவாய், என்னை அன்புடன், ஆர்வமுடன்பிராணநாதா என்றழைத்த உன்செவ்வாய், இன்னும் ஓர்க்ஷணத்தில் திற க்கவும் சக்தியற்றதாய் விடப்போகிறது!—ஆஹா! நீ உயி ருடன் இருப்பையாயின், இன்னும் எத்தனைபேரை வஞ் சிப்பாயோ அறியேன். சீ, என்ன எண்ணியபடி முடிக் காமல்ஏதேதோ எண்ணுகிறேனே! (குத்தப்போம்போது வாள் நழுவிக்கீழ்வீழ்கிறது) —என்ன! (வாளை எடுத்து) ஏ என்னண்பனே, நீயுமோ என் கரத்தைவிட்டு நழு வுகின்ருய்! இக்கொடிய வஞ்சகப் பேய்க்கும் இரக்கம் காட்டுகிருயே—? தவரும் அடைந்திரா திவ்யானந்தத்தை யூட்டிய இத்தெரிவையின் முகத்தைக் காணுந்தோறும், திகழும் என்கைகள் தம்வேலையைச் செய்யத் திகைக்கின் றனவே!—மனமே, நீ என்னிடம் இருக்கத் தகுதியற்ருய். தன் கற்பை இழந்த சண்டாளியினிடத்தும் இவ்விரக்கம் காட்டலாகுமா?—ஆம், இவள் முகத்தைக்கண்டால் என் எண்ணமேபறந்து ஓடிப்போகிறது—நன்மைக்கும் தீமை க்கும் நற்சாக்ஷியாய் விளங்கி, விளக்கத்தைத் தந்தொளிர் தீபமே, நீ அடங்குவாய் ஒளிமழுங்கி. உன் விளக்கத்தைக் கோரினுர் இங்கில்லை. இக்கொடியவளிடம் உன் விளக்கம் செல்லின், அதுமேலும் பாதகத்தினையே விளைப்பதாம். மழுங்குவாய், ஒளிகுன்றி. (தீபத்தை அவித்து விடுகிருன்) —நண்பனே, நடத்துவாய் உன் வேலையை—(குத்தப் போகிருன்) ஐயோ! விலோசனு, அன்புடன் என்னைக் கட்டி அணைத்த உன் அழகிய் கரங்கள், ஏனோ வாளா

இருக்கின்றன—உண்மையில் உறங்குகிறளோ?—பாவம், நான் ஏன் இவளை உறக்கத்திலேயே கொல்ல வேண்டும்! இனிவரும் பிறவியாவது நற்பிறவியாக உனக்கு—விஜயா, என்ன தாமதம்? உன்னை வஞ்சித்தபேய் என்பதை மறந்தாயோ?—ஆம், காலதாமதமேன்—(அவள் கரத்தைப் பற்றி ஈர்த்து) பேயே வந்து நில் இப்படி.

விலோசனை—ஆ!—பிராணநாதா!

விஜயன்—பிராணநாதா!—மற்றொரு முறை என்னை அப்படி அழைத்தால், உன் உயிரை வாங்குவதன்முன், அங்ஙனம் சொல்வதற்குக் கருவியாய் உள்ளஉன்நாவை அறுத்தெறிவேன்.

விலோசனை—என்ன!—பிராணநாதா, விளையாடுகின்றீரா என்ன என்னுடன்?

விஜயன்—(நகைத்து) ஆம், உன்னையொத்த உத்தம மனைவியுடன் தான் விளையாடவேண்டும்.

விலோசனை—ஐயோ! தாம் சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே. (அவனருகிற்செல்கிறுள்.)

விஜயன்—விலகிநில், பாதகி.

விலோசனை—பிராணநாதா! பாதகியன்றேநான்!

விஜயன்—பாதகியல்ல; பாதகத்தினும் பாதகத்தைச் செய்த பாதகி நீ.

விலோசனை—தெய்வமே!

விஜயன்—ஆம், நீசெய்த பிழைகளை எல்லாம் மன்னிக்கும்படி அத்தெய்வத்தையே வேண்டிக்கொள். அத்தெய்வமும் உன்னையொத்தபாவிகளை மன்னிக்குமாயின், அதனைநான் கண்ணற்றதெய்வம் என்று, கலக்கமற உரைப்பேன். நேரமாயது. நீ எந்தத் தெய்வத்தை அழைத்தனையோ, அத்தெய்வத்தினை மனத்திற்கொள், மாபாவங்கள் அற. என் வாள் உன்னைக்கொல்ல, வாவுகிறது.

விலோசனை—ஐயோ! என்னைக் கொல்லவா போகிறீர்?

விஜயன்—ஆம்.

விலோசனை—ஏன்!

விஜயன்—ஏனு? அடிவஞ்சகப்பேயே, நான் உன் வஞ்சகச்செயலை அறியவில்லை என்று எண்ணி விட்டனேயோ?

விலோசனே—பிராணநாதா—

விஜயன்—அப்படி அழையாதே என்னே.

விலோசனே—என், நான் தங்களை அப்படி அழைக்கப்படாது! நான் தங்கள் மனைவி அன்றே?

விஜயன்—பேயே, அதை எல்லாம் என்முன் சொல்லாதே இப்போது. எண்ணிக்கொள் ஈசனை.

விலோசனே—தெய்வமே, என்ன இவருக்கு இப்படிபுத்திமாறி விட்டதே. ஐயோ! சற்றுமுன்நன்றுய் இருந்தாரே!

விஜயன்—(நகைத்து) பேஷ்! எனக்காபுத்திமாறிவிட்டது? காதகி, நான் என்சுயபுத்தியுடன்தான் இருக்கிறேன். வேண்டுமானல், பார் என் நாடியிற் கைவைத்து. உனக்கேன் அந்த சந்தேகம். பார் உன் நாடிகள் பேசுவனபோலவே என் நாடிகளும் பேசுகின்றன.

விலோசனே—பிராணநாதா—

விஜயன்—பேசாதேயொன்றும். எண்ணிக்கொள்ஈசனே, என்னே நீ வஞ்சித்தாய் எனினும், உன்னே வஞ்சிக்க எனக்கு இஷ்டமில்லை. எண்ணிக்கொள், ஈசனே.

விலோசனே—ஐயோ! நான் தங்களுக்கு ஒரு வஞ்சகமும் செய்ய வில்லையே.

விஜயன்—செய்யவில்லை! செய்தன எல்லாம் போதாதோ? இன்னும் உயிருடன் இருந்தால், நீ என்னதான் செய்யத் துணியாய்?

விலோசனே—பிராணநாதா, நான் மனமார ஒரு குற்றமும் செய்யவில்லையே; செய்யவில்லையே!

விஜயன்—அதை என்னிடம் சொல்லவேண்டாம். எமனிடத்திற் சென்று இயம்புவாய்.

விலோசனே—ஐயையோ! நான் என்ன செய்வேன்!—பிராணநாதா! நான் என்னகுற்றம் செய்தேன்? அதையாவது சொல்லுங்கள். அப்படி நான் செய்தது குற்றம் ஆயின், நானே தங்கள் பாதத்தில் வீழ்ந்து மடிந்து விடுகிறேன்.

விஜயன்—அவ்வளவு சிரமம் உனக்கு வேண்டாம். இதோஎன் வாளைப்பார்.

விலோசனை—எப்படி வேண்டுமானாலும் செய்யுங்கள்; நான் செய்த குற்றத்தை வெளியிட்டு.

விஜயன்—அதைநானே, வெட்கம் விட்டு விளம்பரப் படுத்த வேண்டுமோ ?

விலோசனை—அப்படிப்பட்டகாரியம் நான் என்னசெய்தேன்! —ஐயோ!பிராணநாதா, தாம் அதைச் சொல்லலாகாதா, என் பொருட்டு?

விஜயன்—அதைநானே சொல்ல, எனக்கு மனம் இல்லை.

விலோசனை—மனம்இல்லையா! —பிராணநாதா, யான் உமது மனைவியன்றோ? மனமார நான் ஒரு குற்றமும் செய் யாதபோது, தாம் என்னைக் கொல்வது நியாயமாகுமா ?

விஜயன்—நியாயந்தான்! என்காலத்தைப் போக்காதே. எண் ணிக்கொள் ஈசனை:

விலோசனை—பிராணநாதா அவசரப்பட்டு ஒன்றும்செய்யா தீர்!—

விஜயன்—ஆஹா! என்னபுத்தி! பேய்களும் நீதிபேசுகின்றன வே இப்பேருலகில்!

விலோசனை—பிராணநாதா, நான் என்னதான் பிழைசெய்தா லும், அதைத் தாம்மன்னிக்தலாகாதா! தாம்என்னைக் கொல்லத்தக்க அவ்வளவு பெரியகுற்றம், யான் என்னசெ ய்தேன். பிராணநாதா!—

விஜயன்—பேயே, என்னை அப்பெயரிட்டழைக்க வேண்டாம் என்று எத்தனை முறைசொல்வது? ஒஹோ, தெரிந்துகொ ண்டேன். சரி, நான்எப்போது உன்பிராணனுக்கு நாதன் ஆனேனோ, அப்போதே அதைஎன்னவேண்டுமாயினும் செய்யலாம் அன்றோ? அதனை இப்போது காலன்பதிக்கு அனுப்பப்போகிறேன்.

விலோசனை—ஒருகுற்றமும் செய்யவில்லையே நான்!

விஜயன்—அதையேன் மறுபடியும் சொல்கிறாய். நான்தான் பிராணநாதனாயிற்றே.

விலோசனை—ஆம். ஆனால், அடியாள்செய்தகுற்றம் இன்னதென்று தெரியவேண்டாமா?

விஜயன்—அப்படியா? அதையும் வெட்கம் விடுத்து வெளியிடுகிறேன். நீ வசிகரனைக் காதலித்தாய்?

விலோசனை—ஆஹா!—யார்சொல்லியது அப்படி?

விஜயன்—நானே நேரில் பார்த்தேன். பிறர் சொல்லவேண்டுமோ?

விலோசனை—ஐயோ! சிவமே!—பிராணநாதா, நான் ஒன்றும் அறியேனே! வேண்டுமானால், அவரை வரவழைத்துக் கேளும்.

விஜயன்—கேட்கவேண்டுமா? கேட்கிறேன் அவனை நான் அவ்வுலகில்!

விலோசனை—ஆ!—ஐயோ, பாவம்! ஒரு பாவமும் அறியாத அவரைத் தாம் வருத்த எண்ணுகிறீரா?

விஜயன்—போதும்! போதும்! பேயே, நான் எதிராகஇருக்கிறேன் என்பதையும் கவனியாமலா அவனுக்கிரங்குகிறாய்?

விலோசனை—தெய்வமே!-தெய்வமே! பிராணநாதா,இனிநான் இவ்வுலகில் இருந்தும் இறந்தவளே யாகும். எப்போது நான் தம்மால் வெறுக்கப்பட்டேனோ, அப்போதே பிணத்திற்குச்சமானம் ஆயினேன். அந்தோ! ஒரு பாபமும் அறியாத என்தலைமேல் இப்பழி வரவேண்டுமா? பிராணநாதா, தங்கள்கரத்தால் மாள்வதை விடஎனக்கு வேறு என்ன சுகிர்தம் உண்டு?—பிராணநாதா, நான் இறப்பதற்காகவருந்தவில்லை!—தம்முடைய அருமைத்திருமேனியை இனி காண்பதற்கில்லையே என்றுதான் வருந்துகிறேன்!

விஜயன்—ஆஹா! என்ன இரக்கம்! என்னஇரக்கம்! ஆடு நனைகிறதென்று, கோனாய் குந்தி அழுகிறது!

விலோசனை—பிராணநாதா, நான் சத்தியமாகச் சொல்கிறேன். தாம் கருதியவண்ணம் யான் தங்களைவஞ்சிக்கவே இல்லை.

விஜயன்—ஆம், சத்தியம்ஒன்றுதான் பாக்கி. பாதகி! மரணத் தருவாயில் இருக்கும் நீ, ஏன் பொய்சொல்வதாலாம் மா பாதகத்தினைத் தேடிக்கொள்கிறாய்?

விலோசனை—ஐயோ, நான்சொல்வது பொய் அல்லவே. உம் மீது ஆணைப்படி சொல்கிறேன்.

விஜயன்—ஆம், என் தலையிலடித்தும் சத்தியம் செய்வாய். நேர மாயது. எண்ணிக்கொள் ஈசனை.

விலோசனை—ஈசனே! ஈசனே!—பிராணநாதா, நான்தான் இற க்கப் போகிறேன்—ஏழை வேண்டும்—இரண்டு வரங்களை அருள்செய்யும்.

விஜயன்—வரம்—உன் உயிர் நிலைபெறு மார்க்கத்தை விட்டு வேறெவற்றையேனும் கேள் தருகிறேன். கேள், நேரமா கிறது.

விலோசனை—பிராணநாதா, ஒரு முத்தம் கொடும்.

விஜயன்—சீ! என்னகேட்டனை? நானே உன்னை மறுபடியும் தீண்டுவேன்?—என்ன மாயம்!

விலோசனை—வரத்தைமறந்தீரா, இதற்குள்!

விஜயன்—ஓ!—தவறேன் தந்தவரத்தில். இதனால், என் மன நிலையை மாற்றலாகும் என்று எண்ணினையோ?—உம், இதுவே யான் உனக்குத்தரும் கடைசி முத்தமாகும். (முத்தமிட்டு) இதனுடன் இறைவன் பதத்தைச்சேர்.

விலோசனை—இதுவே போதுமானது. பிராணநாதா, மற்றோர் வரத்தை மறவாதீர். நான் இறந்தபின், தாம் உண்மை யினை அறிந்து என்னைக் குற்றமற்றவள் என்று அறிவீர். அக்கால் தாம் சுகமாய் இருக்கும் நேரங்களில், தமக்கு இனியமனைவி விலோசனை என்பவள் ஒருத்தியிருந்தாள் என்பதை மறவாதிருக்க வேண்டுகிறேன் பிராணநாதா, இதுவே யான் தம்மைக்கோரிய இரண்டாவதுவரம்.

விஜயன்—(ஒருபுறமாய்) என்ன! வரத்தைக் கோரியஇவள், இவற்றைஎல்லாம் கேட்பானேன்? இவைஎல்லாம் மனதை வசமாக்கும் வேலைகளே—அப்படியே ஆகட்டும். எண்ணிக்கொள் ஈசனே.

விலோசனே—(விஜயன்பதத்திற்பணிகிருள்) பிராணநாதா, வெட்டிவிடும்என்னை. தங்கள்பதமலரிலேயே உயிர்விட்டு நற்கதியடைகிறேன்.

விஜயன்—(ஒருபுறமாய்) என்ன! இவள்செய்வதெல்லாம் எனக்கு ஒன்றும் விளங்கஇல்லையே! விலோசனு, நீ என்னை வஞ்சித்தாய் என்பது உண்மையே. அதைநானே நேரிற்கண்டேன். ஆயினும், உன்னைவஞ்சிக்கஎனக்கு இஷ்டம்இல்லை. ஆதலால் சொல்கிறேன் கேள் என்னைமறந்துவிடு. எல்லாப் பிழையும் அற அவ்விறைவனை வேண்டுவாய்.

விலோசனே—ஐயோ! இவ்வளவு இரக்கம்பாராட்டும் தாம்! எப்படி என்னைக்கொல்ல மனந்துணிந்தீர் பிராணநாதா,

விஜயன்—அதை எண்ணுதே. நேரமாயிற்று.

விலோசனே—ஈசனே! நான் என்பிராணநாதரை வஞ்சிக்காது நடந்துவந்தவளாயின், மறுபிறப்பினும் அவரையேயான் மணாளராக அடைய அனுக்கிரஹியும்.

விஜயன்—(வாளை உயர்த்துகிருன்)

[ஜயசூடாமணி முதலானோர் வருகிருர்கள்]

ஜயசூடாமணி—ஆஹா! (விஜயன் கரத்துள்ள வாளைப்பற்றிக் கொண்டு)—அடே, இவனைக்கட்டிச் சிறையில் இடுங்கள் —அடே இந்த எண்ணமா கொண்டனை? — கட்டுங்கள் விரைவில்.

கொலையாளிகள்—(விஜயன் கரங்களைக் கட்டுகிருர்கள்)

விஜயன்—ஈசனே! ஈசனே!

ஜயசூடாமணி—அழைத்துச்செல்லுங்கள். (போகிருன்)

[எல்லோரும் போகிருர்கள் விலோசனே மூர்ச்சையாய்க் கீழேவிழ்கிருள்]

# மூன்றாமங்கம்—ஐந்தாங்காட்சி.

---

**களம்:** அரண்மனையில் ஓர் அறை—**காலம்:** மாலை.

**சித்திரபாஹு**—ஆ, ஹா! நான் என்னமோசம் போயினேன். இப்படி வருமென்று நான் கனவிலும்எண்ணாமற் போனேனே! படுபாவி சுகுமாரன்!— எனக்கெனச் சனியனாய்த் தோன்றவேண்டுமா! ஈசனே! ஈசனே! இப்போது நான் என்னசெய்வது! எப்படியோ சுகுமாரன் உண்மையறிந்துதான் பாலசூர்யனை இவ்விடம் அழைத்து வந்திருக்கிறான். ஆ! என்னவிபரீதம்நேரிடப்போகின்றதோ தெரியவில்லை யெனக்கு!சுகுமாரன் நடந்தவிஷயத்தினையறிந்திராவிடின் அவன் ஏன் பாலசூர்யனை அழைத்துவருகிறான். அந்தோ! அவன் சின்னாள் இங்கு இராதிருந்ததைச் சிறிதும்கவனியாமற் போனேனே! ஆஹா! ஏனோ பாவிநான் வசீகரனைக் கொன்றேன். அஃதன்றோ பெரும் பிழையாயது இப்போது!எப்படியும் கணதேவன் அதை வெளியிடுவான்போலத் தெரிகிறது. அந்தோ, அவன் அருகிருந்ததையும் கவனியாமற்போனேனே. என்னமடத்தனமான வேலைசெய்தேன்! அப்போதே அவனையும் உடன்கொன்றிருந்தால் இவ்வளவு ஏக்கம் கொள்ளவேண்டியதில்லையே நான்—எப்படி நான் 'வசீகரனை விஜயன் தான்' கொன்றான் என்று ரூபிப்பது— அசாத்தியம்! அசாத்தியம்!—யார் அது வருவது!! அந்தோ! அதோ படுபாவி சுகுமாரன் என் தந்தையை அழைத்துக்கொண்டு வருகிறான். உடன்—கணதேவனும் பாலசூர்யனும் வருகிறார்களே!

[போய் மறைவான இடத்தில் மறைந்து கொள்கிறான். ஜயசூடாமணி, சுகுமாரன், பால சூர்யன், கணதேவன் வருகிறார்கள்.]

**ஜயசூடாமணி**—கணதேவா, நீசொல்வன யாவும் உண்மையே.

**கணதேவன்**—மஹாராஜா, தாமே அவரை நேரிற் கேட்டுப் பாருங்கள்.

ஜயசூடாமணி—கேட்பதென்ன இன்னும்? இவ்வளவுசூதுகளை யெல்லாம் செய்த அத்துஷ்டன் இதனைத்தானு செய்யாம லிருக்கப்போகிறுன்—சுகுமாரா, நீ உண்மையை அறிந்த அப்போதே என் என்னிடம் சொல்லியிருக்கலாகாது?

சுகுமாரன்—மஹாராஜா, மன்னிக்கவேண்டும் என்னை. நடந்த விஷயங்களை எல்லாம் சரியாய் ரூபிக்கவேண்டுமென்றே இங்ஙனம் செய்யலானேன்.

ஜயசூடாமணி—ஆம், அஃதும் உண்மையே—சண்டாளனுக்கு இரக்கம் என்பது சிறிதும் இல்லாமற் போயிற்றல்லவா? என்ன என்ன வேலைகளைச் செய்யத்துணிந்தான் அவன்! பாதகன்!—சுகுமாரா, இத்தகைய பாவிகளுக்கு எவ் விதமான தண்டனை விதிக்க வேண்டுமென்று தர்மசாஸ் திரங்கள் கூறுகின்றன சொல்—என்ன பேசாமலிருக்கி ன்றுய்? பாதகனவனை யிப்பாரினில் வைப்பதும் தவறும். சொல் விரைவில். பூர்வத்தில் நான் என்ன பாதகம் செய் தேனே இப்பாவியை மகனுய்ப்பெற? என்னயோசனை இன்னும்?

சுகுமாரன்—மஹாராஜா, இத்தகையோரைசிரச்சேதம் செய்ய வேண்டுமென்று தர்மசாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஜயசூடாமணி—ஆம், ஆம், சிரச்சேதம் செய்வதினும் சித்திர வதை செய்வதேமேலாம்! எங்கே அச்சண்டாளன்! இவ் விடத்திலும் காணுேமே!எங்குப்போயிருப்பான் அவன்?

சுகுமாரன்—ஒருக்கால், நாங்கள் வந்ததன் உண்மையறிந்து எங்கேனும் ஓடியிருப்பாரென் றெண்ணுகிறேன்.

ஜயசூடாமணி—உம்! அடே சித்திரபாஹு! தப்பிப்பிழைக்க லாமென் றெண்ணிவிட்டாயோ? எங்கே ஓடியிருப்பாய் நீ பார்க்கின்றேன்.

சுகுமாரன்—மஹாராஜா, விஜயரைச் சிறையினின்றும் விடு விக்க—

ஜயசூடாமணி—ஆம், ஆம், மறந்தேவிட்டேன்நான். இக்கணை யாழியைக் கொண்டுபோய்ச் சிறைக்காவல னிடந்தந்து விஜயனை விடுவித்துக்கொண்டு வாவிரைவில். (கணையாழி யைத்தருகிறுன்.)

சுகுமாரன்—அப்படியே, இதோ வந்துவிட்டேன்.

ஜயசூடாமணி—ஒரு வார்த்தை. சுகுமாரா? நீதான் எப்படி யாவது விஜயனுக்கு என்மீது இருக்கும் அருவருப்பை யெல்லாம் மாற்றவேண்டும். நான் என்மனமாற அவனு க்குஒருதீங்கையும் செய்யவில்லை—அந்தோ! அவன்என்னை என்ன என்று எல்லாம் இகழ்கிறனே! இவ்வுலகில் என் னினுங்கொடிய ஓர் பாவி இல்லையென்று சொல்லிக்கதறு கிறனே! ஒரு குற்றமுமறியாத உத்தமக்குமரனை உளம் வாடச்செய்த பாவி என் முகத்தையும் பார்ப்பனோ மற் றோர்கால்!

சுகுமாரன்—மஹாராஜா, தாம் வருந்த வேணடாம். தாம் என்ன தீங்குசெய்தீர் அவருக்கு? நடந்த விருத்தாந்தங் களை எல்லாம், அவருக்கு நன்றாய் எடுத்துச் சொல்லு கிறேன் நான்.

ஜயசூடாமணி—என்ன சொல்லினும் கேளான்என்மகன். இவ் வளவு பெரிய தீங்கைச்செய்ய எண்ணிய இச்சண்டாள ணாகிய நான் இன்னும் என்னதான் செய்யத் துணியேன் என்று எண்ணுவான் அவன்.

பாலசூர்யன்—விஜயர் ஒருபோதும் அப்படிஎண்ணமாட்டார். எப்படியும் உண்மை உணர்ந்து தாங்கள் நிரபராதி யென் பதை அறிவார்.

ஜயசூடாமணி—சிறையி லிடச்செய்த சிதடனும் என்னையும் என் செல்வக்குமரன் மன்னிப்பானோ!

சுகுமாரன்—மஹாராஜா, தாமேபார்க்கப்போகின்றீர் நேரில். நான்வருகிறேன். (போகிறன்.)

ஜயசூடாமணி—பாலசூர்யா, கணதேவா, வாருங்கள் போ வோம். எப்படியும் அச்சண்டாளனுயிரை இன்றே எம னுலகனுப்ப வழிதேடுவோம்!

[மூவரும் செல்கின்றனர். சித்திரபாஹு மெதுவாய் வெளிவருகிறன்.]

சித்திரபாஹு—ஆ! என்னையோ எமனுலகனுப்பப் போகின் றீர் நீங்கள்?—ஆம், ஆம், இச்சண்டாளன் இனி இவ்

வுலகிலிருக்கத் தகுந்தவனல்லன். ஏ, சித்திரபாஹு. நீ என்ன என்ன காரியங்களை எல்லாம்செய்தனை! அந்தோ! கெடுமதி கண்ணுக்குத் தோற்று தென்பதுபோல் ஆயிற்றே என்கதி. ஈசனே! ஈசனே! நான் ஒருவன் சுகமாய் வாழவேண்டு மென்றெண்ணியதனாலன்றோ இப்பெருந் துயர்க்காளானேன். பிறர்மனை நயத்தலாலாம் பெருங் கேட்டை அறிந்திருந்தும் பேதையானேனே! ஆ ஹா! ஒரு பாபமு மறியாத பதிவிரதா சிரோன்மணியின்மேல் வீண்பழியைச் சுமத்தினேனே! அந்தோ! இப்பாபங்களை எல்லாம் எப்படிநான் தொலைக்கப் போகின்றேன். கெடுவான் கேடுநினைப்பான் என்பது உண்மையாயது, உண்மையாயது.—சீ, இன்னும் இவ்வுலகில் உயிர்வைத்திருப்பது அடாது, அடாது. (உடைவாளை உருவி) கொடுந்தொழில்களை யெல்லாம் செய்யக்காரணமாயிருந்த என் கூர்ங் கத்தியே, கொல்வாயென்னை; கொற்றவன் ஆஞ்ஞையால் கொலைஞர்கள்வந்து என்னைக்கொல்வதன்முன். மனமே! நீ இப்பாவங்களைச் செய்ததனால் ஆம் பெரும் பயன்களை யெல்லாம் அப்பாழ்நரகில் அடையப்போகின்றாய். இனி வரும் பிறவிகளிலேனும் இக்கொடிய எண்ணங்களை எல்லாம்விட்டு உன்னை உடையானுக்கு நற்கதியை விளைவிப்பாய். பிறர்பொருளை வெளவாதே. பிறர்மனையை விழையாதே, பிறர்கேடுற எண்ணாதே. அங்ஙனம் நீ என்சொலை மறுத்து எண்ணுவையாயின் இப்பொழுது அடையப் போகுங்கதியையே யடைவாய்.—விஜயா, நீ உன் மனைவியைக் கற்பிற்கரசி யென்றெண்ணுவாய். களங்கமற்றவள் அவள். கற்பையே, தன் உயர் ஆபரணமாகக்கொண்ட காரிகை- அந்தோ! நீ அவள்மீது கொண்ட எண்ணம் எப்படி உன் மனதைவிட்டு அகலப்போகிறதோ தெரியவில்லையே.— யார் அது வருவது! யாரோவருகிறார்கள். கொலைஞர்கள் தான் போலிருக்கிறது. (கத்தியால் குத்திக்கொண்டு சாய்கிறான்.)

[விஜயனும் சுகுமாரனும் வருகிறார்கள்.]

விஜயன்—என்ன சொல்லினும் கேளேன். கண்டேன் என் கண்களால் அக்காரிகை கற்பழிந்ததை? என்ன சொல்லு

கின்றாய்? இதோ இவ்வாளினால் அவளைக் கொன்று வருகிறாயா அல்லது, என் உயிரை இப்படியே போக்கிக்கொள்ளட்டுமா?

சித்திரபாஹு—வேண்டாம், விஜயா வேண்டாம். இதோநான் செய்த தவறுக்கெல்லாம் தக்க தண்டனை யடைந்தேன்.

விஜயன்—ஆ, அண்ணா! உம்மை இக்கோலங் கண்டகொடும் பாவி எவன்?

சித்திரபாஹு—அப்பா, என்னை எவரும் கொல்லவில்லை. விஜயா, வீணில் உனக்கு விபரீதங்களை விளைவித்த இப்பாவிக்கு இரக்கங்காட்டாதே. நான் செய்த தவறுக்காக நானே தற்கொலை புரிந்துகொண்டேன். நான் மாசற்ற மங்கைமீது பழி சுமத்தியதை உண்மையென்று நம்பாதே. எல்லாம் என் வஞ்சகத்தால் ஏற்பட்டவையே. விஜயா, உனக்குச் சுகுமாரன் கூறிவந்தவையாவும் உண்மையே. உன்மனதை என் வசமாக்கவேண்டுமென்று, அப்போது தான் வசீகரனை அவ்விடம் அனுப்பினேன். மங்கையர்க்கரசிமீது சங்கை கொள்ளாதே. விஜயா, மரணத்தருவாயில இருக்கும் பாவி நான் நற்சதி யடைய என்னை மன்னிப்பாய். விஜயா மன்னிப்பாய்!

விஜயன்—அண்ணா, மன்னித்தாவதென்ன இனி! அந்தோ! இவ்வளவு சூழ்ச்சிகள் எல்லாம், இக்கதிக் காளாகவோ செய்தீர்?

சித்திரபாஹு— என் அருமைத்தம்பி! நான் என் செய்வேன்! என் தீவினை இப்படி என் பிடரியைப்பற்றி உந்தியது. விஜயா, என் பிராணன் போகிறது. இப்போதாவது என்னை மன்னித்ததாகக்கூறு. சுகமாய் உயிர் விடுவேன். விஜயா! விஜயா!

விஜயன்—அண்ணா, மன்னித்தேன் உம்மைமனப்பூர்வமாய்—(உள்ளிருந்து ஓ எனக்கூய்ச்சல் உண்டாகிறது)—ஆ! அஃதென்ன இரைச்சல்! (ஓடுகிறான்.)

[சுகுமாரனும் அவனைப் பின்தொடர்ந்து போகிறான்.]

# மூன்றுமங்கம்—ஆறுங்காட்சி.

களம்: சயனக்கிருஹம்.—காலம்: இரவு.

[விலோசனை ஓர்கயிற்றால் கழுத்தை இறுக்கிக் கட்டிக் கொள்ளும்போது, தோழி மோஹனை அவளைத்தடுத்து நிற்கிறாள்.]

விலோசனை—விடு மோஹனை, ஏன் கூச்சலிடுகிறாய்? என்னை விட்டுவிடு. வேண்டும் எனக்கு இக்கதி! மன்னரிடம் நடந்த விஷயத்தை மறைக்கப் பார்த்ததாலன்றோ எனக்கு இக்கதி எனக்கு வாய்த்தது! வேண்டாம், என்னைவிடு, இனி நான் உலகில் இருக்க ஏற்றவள் அல்ல.

மோஹனை—அப்படி அல்ல அம்மா!—அம்மா!—அம்மா! நான் சொல்வதைக் கேளும்.

விலோசனை—கேளேன் எதையும். விடு என்னை. இத்தனை நாள் சகித்திருந்ததேபோதும். இனி அவர் என்னைஏறெடுத்துப் பாரார்.

மோஹனை—அம்மா! அம்மா!—ஐயோ! யாரும் வரவில்லையே!

[ஜயசூடாமணி முதலானோர் வருகிறார்கள்.]

ஜயசூடாமணி—என்ன சமாச்சாரம்! என்ன சமாச்சாரம்!

[விஜயன் சுகுமாரனுடன் ஓடி வருகிறான்.]

விஜயன்—ஆ! விலோசனை! (அணைந்து) மன்னிப்பாய் இப்பாவியை—இஃதென்ன இது!—மோஹனை, என்ன இவையெல்லாம்!

மோஹனை—ஒன்றும் இல்லை. தலைவி தம்மால் வெறுக்கப்பட்டதை எண்ணி, இக்காரியம் செய்யத் துணிந்தனர்.

விஜயன்—ஆஹா! விலோசனை, என்ன காரியம் செய்ய இருந்தனை! (கயிற்றை விசிறிஎறிந்து) கண்ணே, இவ்வளவிற்கெல்லாம்காரணமாய் இருந்த, இக்கடையன் எங்ஙனம் உன் மன்னிப்பைப் பெறப்போகிறேன்!

விலோசனை—பிராணநாதா, நான்தான் தம்மைவஞ்சித்த பாவியாயிற்றே. எதற்காக என் மன்னிப்புவேண்டும் தங்களுக்கு? எனக்கு விடைகொடுங்கள், நான் போகிறேன் இவ்வுலகைவிட்டு!

**விஜயன்**—விலோசனா! விலோசனா! எண்ணாதே அவற்றை—நடந்த விஷயத்தை நீ கேட்டாய் ஆயின், என்னை நிரபராதியென எண்ணுவாய். பாதகர்சூழ்ச்சியால், பாவிநான், பைங்கிளியே! உனைப்பதைக்கச் செய்தேன். அந்தோ! விலோசனா, நீ என்னிடம், அன்றே உண்மையினை உரைத்தலாகாதா! இவ்வளவு விபரீதம் எல்லாம் விளைந்திராதே.

**விலோசனை**—அதைப்பற்றி எல்லாம் இப்போதென்ன பிராண நாதா? தாமே நான் கற்பிழந்ததை நேரிற் கண்டதாகத் தான் கூறினீரே—

**எல்லோரும்**—ஈசனே! ஈசனே!

**விஜயன்**—வேண்டும் எனக்கு! விலோசனா, உன்னை நான் காட்டிய கோலத்திற்கெல்லாம், ஈதே தக்க தண்டனையாகும். மேலும் என்னை வருத்தாதே. [illegible] வன்! அப்போதுதான் வசிகரனை உன்னிடம் அனுப்பிய சித்திர பாஹு, என்னை அழைத்து, உன்மீது பழிசுமத்தி, இப்போதே உன்சயன கிருகத்திற் போய்ப்பார் என்று கூறினன். நான் இங்குவந்ததும், அவன் உன் அருகில் நிற்கக் கண்டேன். கண்ணே, இவ்வளவும் வஞ்சகம் என்று நானறியேனே!—விலோசனா, இப்போதாவது மன்னித்தலாகாதா என்னை?

**ஜயசூடாமணி**—அம்மா, குற்றமற்ற கோமகனை, என் செல்வக் குமரனை, சிறையிலிட்ட கொடும்பாவி என்னையும் மன்னிப்பாய்.

**விஜயன்**—அண்ணா, தாம் என் முன் இங்ஙனம் தங்களை இழித்துக்கூற நான் கேளேன். தாம் என்ன தவறு செய்தீர்?

**ஜயசூடாமணி**—(அழுதுகொண்டு) கண்ணே! கடுந் துயர்க்குள்ளாகிய காதகன் அன்றோநான்! அப்பா, உன்னைச்சிறையிலிடவும் மனம் துணிந்தேனே!—விலோசனா, உன் கணவனை இங்ஙனம் செய்தவனாயிற்றே என்று என்னைப் பழிக்காதே, மன்னிப்பாய் என்னை. விலோசனா, மன்னிப்பாய் அவனையும் என் பொருட்டு.

**விலோசனை**—சரிதான் மாமா.

**விஜயன்**—விலோசனா, இன்றே நான் உய்ந்தேன். கொலை செய்யத்துணிந்த கொடும்பாவி என்னையும் மன்னித்த [illegible]ர் குணத்தை என் எனப் புகழ்வேன்.

விலோசனை—ஆமாம், இப்போது சொல்வதற்கென்ன? நான் மாமா அவர்கள் கேட்டுக்கொண்டதால், சரிதான் என்று சொல்லி விட்டேன். இல்லாவிடின்—

சுகுமாரன்—அம்மா, அவர்மீது ஒரு குற்றமும் இல்லை. அவர் நடந்த வஞ்சகத்தை அறியாததால் அப்படி செய்தார்.

விஜயன்—சுகுமாரா! நீயே என் உயிர் நண்பன். அப்பா நீயே என் உயிரையும், என்னுயிர்க்குபிராம் விலோசனையையும் காத்தாய். உனக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம். அப்பா, எங்கள் ஞாபகார்த்தமாய் இதை அணிந்து கொள்வாய் உன் விரலில். (தன் மோதிரத்தை ... விரலி லிடுகிறான்.

சுகுமார[illegible] அரசே, தாம் இருவரும் சுகமாய் இருக்க நான் [illegible], தாங்க[illegible] எனக்குச் செய்யும் பேருபகாரமாகும்.

விஜயன்—சந்தோஷம்—பாலசூர்யா, என்பொருட்டு நீ சிரமம் எடுத்துக்கொண்டு இவ்வளவுதூரம் வந்ததற்காகநான் உனக்குக் கடமைப்பட்டவனாய் உள்ளேன்.

பாலசூர்யன்—விஜயரே, எனக்கு இதுவுமோர் சிரமமா? அப்படி சொல்லவேண்டாம்.

ஜெயசூடாமணி—எல்லோருக்கும் சிரமம்கொடுத்த நான் அன்றோ எல்லோரையும் கேட்டுக் கொள்ளவேண்டும்?—விஜயா! இனி நீயே இம்மண்டலத்திற் கதிபதியாய் இருந்து, எங்களை எல்லாம் களிக்கச் செய்வாயாக! நான் இதுகாறும் பட்ட கஷ்டங்களுக்கெல்லாம், அதுவே ஆறுதலாகும்—பாலசூர்யா, எல்லாம் நன்மையாகவே முடிந்தன; இறைவன் அருளால்! நீங்கள் எல்லோரும் இன்னும் சிலநாள் இங்கு இருந்து, விஜயனின் மகுடாபிஷேகத்தைக்கண்டு களிகூருங்கள்.

எல்லோரும்—சந்தோஷம்!

67965

மங்களம்.

O-, 2MKP.V
N16

நாடகம் முற்றும்.